(உ) *முதலீடுகள்.-* நிலுவைத் திகதிக்கு மூலதனங்களின் பெறுமதி விற்பனைப் புறழ்வு மதிப்பிற்கேற்ப கணிக்கப்படுவதோடு வியாபாரப் பெறுமதியும் கணிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளது.

5. **நிதிப்பிரகடனம் பற்றிய குறிப்புகள் :**

| | *2005* | *2004* |
|---|---|---|
| 1. **வட்டி வருமானம் :** | 1,000,483,475 | 942,581,543 |
| ஆண்டுக்குள் கிடைத்த வட்டி | (3,407,316) | 1,299,202 |
| | 997,076,159 | 943,880,745 |
| *கழி :* | | |
| சனவரி 01 ஆந் திகதிக்குக் கிடைக்கவேண்டிய வட்டி | 337,932,925 | -303,352,468 |
| கிடைக்கப்பெற்ற வருடத்துக்குரிய வட்டி | 659,143,234 | 640,528,277 |
| *கூட்டு :* | | |
| திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கிடைக்கவேண்டிய வட்டி- | | |
| 1. ரூபாக் கடன் | 167,693,308 | 188,423,020 |
| 2. திறைசேரிப் பற்றுச்சீட்டுக்கள் | 6,550,172 | 49,190,234 |
| 3. திறைசேரிப் பிணைப்பத்திரங்கள் | 130,822,069 | 100,319,671 |
| | 305,065,549 | 337,932,925 |
| வருடத்துக்குரிய வட்டி | 964,208,783 | 978,461,202 |

2. **நிலையான சொத்துக்கள் :**

| | தளபாடங்களும் பொருத்துகளும் | அலுவலக உபகரணங்கள் | கணனி உபகரணங்கள் | மொத்தப் பெறுமதி |
|---|---|---|---|---|
| வருமானப் புறழ்வு | | | | |
| 2005.01.01 ஆந் திகதிய நிலுவை | 48,946 | 631,577 | 385,282 | 1,065,805 |
| இணைப்புக்கள் | - | 33,737 | 83,540 | 117,277 |
| 2005.12.31 ஆந் திகதிய நிலுவை | 48,946 | 665,315 | 468,821 | 1,183,082 |
| மொத்தத் தேய்வு | | | | |
| 2005.01.01 ஆந் திகதிய நிலுவை | 22,600 | 304,654 | 190,633 | 517,886 |
| வருடத்துக்கான அறவீடு | 2,635 | 32,692 | 29,197 | 64,524 |
| 2005.12.31 ஆந் திகதிய நிலுவை | 25,235 | 337,346 | 219,830 | 646,935 |
| 2005.12.31 ஆந் திகதிக்கு தேறிய பெறுமதி | 23,711 | 327,969 | 248,991 | 600,671 |
| 2004.12.31 ஆந் திகதிக்கு தேறிய பெறுமதி | 26,346 | 326,923 | 194,649 | 547,918 |

3. **முதலீடுகள்**.- இலங்கை மத்திய வங்கியில் செய்துள்ள முதலீடுகளின் கொள்விலை ரூபா 11,047 மில்லியன் ஆவதுடன் சந்தை விலை ரூபா 8,722 மில்லியன் ஆகும்.

4. **கிடைக்கவேண்டிய அரச பங்களிப்புப் பணம்**.- திரட்டிய நிதியத்திலிருந்து கட்டாய பங்களிப்பான 8% அளவுக்கு நிகரான அரசிடம் இருந்து பெறப்படவேண்டிய 12% என்பதும் வருட இறுதியில் கிடைக்கப்பெறாத வீதமும் இங்கு நிர்ணயிக்கப்படுகின்றது.

5. **செம்மையாக்கல் கணக்கு**.- இக்கணக்கில் காட்டப்பட்டுள்ளவை ஏனைய திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்ட பிழையான வரவுகளும் பிழையான செலவுகளுமாகும். இவ்வாறான பிழையான வரவுகளும் பிழையான செலவுகளும் அத்திணைக்களங்களுக்கு அறிவிக்கப்படுவதுடன் அவர்கள் அதனை திருத்திய பின்னர் இம்மீதிகள் செம்மையாக்கப்படுகின்றன.

6. **முழு நிதியம்**.- அங்கத்துவ நிதிக்கான வைப்புக்களின் நிலுவைகள் இதிலிருந்து நிரூபணமாவதோடு இதனுள் கட்டாய அங்கத்துவப் பணம், தன்னார்வ அங்கத்துவப் பணம், அரச அங்கத்துவப் பணம் மற்றும் இவற்றிற்குரிய வட்டி என்பன உள்ளடங்குகின்றன.

7. **பொது மையம்**.- கிட்டிய கால் சதவீத வட்டி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பின்னர் எஞ்சிய மீதி இக்கணக்குகளில் காட்டப்படுகின்றது. இவ்வருடத்தில் கிட்டிய கால் சதவீத வட்டி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பின்னர் எஞ்சிய மீதியான ரூபா 4,670,935 பொதுக் கணக்குக் குழுமத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. 31.12.2005 இல் மீதி ரூபா 18,531,947 ஆக இருந்தது.

8. **செலுத்தவேண்டிய செலவுகள்**.- மீளாய்வாண்டில் திரட்டிய நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகள் இங்கு தெளிவாகிறதுடன் ஓய்வூதிய திணைக்களத்தினால் மின்சாரம் மற்றும் நீர் சார்பாக செலவுசெய்யப்பட்ட ரூபா 598,960 தொகையும் இதற்குள் அடக்கப்பட்டுள்ளது.

| | 2005 | 2004 |
|---|---|---|
| மின்சாரமும் நீரும் | 598,960 | 161,294 |
| நிர்வாகச் செலவுகள் | 3,236,211 | 3,405,623 |
| | 3,835,171 | 3,566,917 |

எஸ். என். ஹப்புஆராச்சி,
அரச ஊழியர் சேமலாப நிதியம்,
முகாமைத்துவ சபையின்
செயலாளரும் கணக்காளரும்.

2006, நவெம்பர் 16

கே. ஏ. திலகரத்ன,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகமும்
அரச ஊழியர் சேமலாப நிதிய
முகாமைத்துவ சபையின் தலைவரும்.

2006, நவெம்பர் 16.

அரச ஊழியர் சேமலாப நிதி

2005.12.31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் பற்றிய கணக்கு

| | 2005 | | 2004 | |
|---|---|---|---|---|
| சனவரி 1 ஆந் திகதிய நிலுவை | | 323,337,238 | | 632,442,588 |
| பெறுவனவு | | | | |
| கட்டாய அங்கத்துவம் | 496,376,529 | | 225,527,179 | |
| அரச பங்களிப்புப் பணம் | 251,182,617 | | 251,412,810 | |
| வட்டி | 1,000,483,475 | | 942,581,543 | |
| பிழையான வைப்பு | 1,205,260 | | 92,130 | |
| காசாக்கப்பட்ட முதலீடுகள் | 4,510,750,715 | | 5,406,260,275 | |
| | 6,260,043,595 | | 6,825,883,937 | |
| கழிக்கப்பட்டது : | | | | |
| கொடுப்பனவு | | | | |
| கட்டாய அங்கத்துவம் | 26,238,678 | | 40,598,357 | |
| அரச அங்கத்துவம் | 23,194,706 | | 32,040,617 | |
| செலுத்தப்படாத பங்களிப்புப் பணத்தைத் திரட்டிய நிதியில் வைப்புச் செய்தல் | 12,056,488 | | 15,728,015 | |
| நிருவாகச் செலவினம் | 5,061,489 | | 3,395,592 | |
| கணக்காய்வுச் செலவு | 262,037 | | - | |
| பிழையான வைப்பு | 2,135,501 | | 5,840,104 | |
| மூலதனச் சொத்துக்களை தேர்ச்சி பெற செவ்வையாக்கம் (வரவு-செலவு) | - | | - | |
| மூலதனம் | 5,576,789,456 | | 7,037,386,602 | |
| | | 614,305,241 | | 309,105,350 |
| திசெம்பர் 31 ஆந் திகதிக்கு மீதி | | 937,642,479 | | 323,337,238 |

## அரச சேவை ஊழியர் சேமலாப நிதி

2005.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்துக்கான வரவு செலவுக் கணக்கு

| | குறிப்பு | 2005 | | 2004 | |
|---|---|---|---|---|---|
| வருமானம் : | | | | | |
| வட்டி | | | 1,006,535,865 | | 1,023,565,692 |
| கழிக்கப்பட்டது (வட்டிக்கான வரி) | | | 42,327,082 | | 45,104,489 |
| | 1 | | 964,208,783 | | 978,461,203 |
| கழிக்கப்பட்டது : **செலவுகள்** | | | | | |
| மின்சாரம் | | 245,628 | | 112,209 | |
| நீர் விநியோகம் | | 46,765 | | 49,085 | |
| தனிப்பட்ட சம்பள/வேதனங்கள் | | 4,602,443 | | 3,135,234 | |
| பிரயாணச் செலவுகள் | | 410 | | 860 | |
| காகிதாதிகளும் அலுவலக உபரகரணங்களும் | | 65,524 | | 33,525 | |
| பழுது பார்த்தலும் பேணலும் | | 64,770 | | 25,555 | |
| போக்குவரத்தும் புகையிரத ஆணைச்சீட்டுக்களும் | | 243,996 | | 177,630 | |
| கணக்காய்வுச் செலவு | | 300,000 | | 300,000 | |
| நிலையான சொத்துக்களின் தேய்வு | | 64,524 | | 73,602 | |
| சீருடை | | - | | 500 | |
| தபாற் செலவு | | 21,090 | | 21,858 | |
| ஏனைய செலவினங்கள் | | 5,381 | 5,660,530 | 430 | 3,930,488 |
| செலவை மிஞ்சிய வருமானம் | | | 958,548,253 | | 974,530,715 |

| | குறிப்பு | 2005 | | 2004 | |
|---|---|---|---|---|---|
| கூட்டு : பொது மையக் கணக்கிலிருந்து மாற்றப்பட்டது. | | | 29,370,643 | | |
| அங்கத்துவ ஒதுக்கீட்டுக்கான வருமானம் | | | 987,918,895 | | 974,530,715 |
| **அங்கத்தவர்களுக்கு வட்டி வழங்கல் :** | | | | | |
| கட்டாய அங்கத்துவப் பணம் | | 400,347,808 | | 386,542,332 | |
| தன்னார்வ அங்கத்துவப் பணம் | | 934,231 | | 965,066 | |
| அரச அங்கத்துவப் பணம் | | 581,965,921 | 983,247,960 | 578,772,440 | 966,279,838 |
| பொது மையக் கணக்கிற்கு மாற்றப்பட்டது | | | 4,670,935 | | 8,250,877 |

**அரச ஊழியர் சேமலாப நிதி**

2005.12.31 ஆந் திகதிக்குரிய ஐந்தொகை

| **சொத்துக்கள் :** | குறிப்பு | 2005 | | 2004 | |
|---|---|---|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 2 | | | | |
| தளபாடங்கள் | | 23,771 | | 26,346 | |
| அலுவலக உபகரணங்கள் | | 327,968 | | 326,923 | |
| கணனிகள் | | 248,992 | 600,671 | 194,649 | 547,918 |
| **மூலதனம் :** | 3 | | 11,047,803,147 | | 9,985,171,722 |
| அசையும் சொத்துக்கள் | | | | | |
| கிடைக்கவேண்டிய மூலதன வட்டி | | 305,065,550 | | 337,932,925 | |
| கிடைக்கவேண்டிய அரச அங்கத்துவம் | 4 | 583,873,124 | | 90,490,948 | |
| செம்மைப்படுத்திய கணக்கு | 5 | 8,835,468 | | 8,372,072 | |
| திறைசேரிப் பிரதிச் செயலாளரின் கணக்கிலுள்ள மீதி | | 937,642,479 | 1,835,416,620 | 323,337,238 | 760,133,183 |
| முழுச் சொத்துக்கள் | | | 12,883,820,438 | | 10,745,852,823 |
| **சொத்துக்களும் பொறுப்புக்களும் :** | | | | | |
| முழு நிதியம் | 6 | | | | |
| கட்டாய அங்கத்துவப் பணம் | | 5,133,558,790 | | 4,263,494,975 | |
| தன்னார்வ அங்கத்துவப் பணம் | | 11,314,576 | | 10,380,345 | |
| அரச அங்கத்துவப் பணம் | | 7,715,866,384 | 12,860,739,749 | 6,453,983,748 | 10,727,859,068 |
| **மையம் :** | | | | | |
| முதலீட்டு மையம் | | 3,790 | | 3,790 | |
| பொது மையம் | 7 | 18,531,947 | 18,535,737 | 13,861,011 | 13,864,801 |
| **நிலையற்ற பொறுப்புக்கள் :** | | | | | |
| செலுத்தவேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் | | 600,000 | | 562,037 | |
| கடன் கொடுத்தோர் | | 83,540 | | - | |
| செலுத்தவேண்டிய அரச செலுத்துகைகள் | | 26,241 | | | |
| செலுத்தவேண்டிய நிறுவனச் செலவுகள் | 8 | 3,835,171 | 4,544,952 | 3,566,917 | 4,128,954 |
| மொத்த சொத்துக்களும் பொறுப்புக்களும் : | | | 12,833,820,438 | | 10,745,852,823 |

எஸ். என். ஹப்புஆராச்சி,
அரச ஊழியர் சேமலாப நிதியம்,
முகாமைத்துவ சபையின்
செயலாளரும் கணக்காளரும்.

2006, நவெம்பர் 16

கே. ஏ. திலகரத்ன,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகமும்
அரச ஊழியர் சேமலாப நிதிய
முகாமைத்துவ சபையின் தலைவரும்.

2006, நவெம்பர் 16.

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்,

**அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் 2005, திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் 2005, திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்களின் கணக்காய்வு அரசாங்க சேவை சேமலாப நிதிய கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 621) 24 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 (3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டது.

1.2 **கணக்காய்வின் நோக்கெல்லை.-** இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்கள், முறைகள், நடைமுறைகள் என்பவற்றிற்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, கணக்கீட்டுத் தத்துவங்களினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக் கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அவற்றின் ஒட்டுமொத்த வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு, பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதாகவும் மாற்றமின்றிப் பிரயோகித்தும் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டும் காணப்பட்டதா என்பதனை நிர்ணயித்தல் போன்றவற்றினை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

2. **நிதிக்கூற்றுக்கள் :**

2.1 **அபிப்பிராயம்.-** எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் 2005, திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் நிதிக் கூற்றுக்களுக்கான (இலக்கம் 01 இலிருந்து 08 வரையான) குறிப்புக்களும், குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் அமைய அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் 2005, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் குறிப்பிட்ட புத்தகங்களுக்கு இசைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

2.2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் :**

2.2.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பணம்.- 1977, ஓகத்து 16 ஆந் திகதிய 836 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள் உரிய ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஏப்பிறல் 30 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2005, திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக ஆறுமாத கால தாமதத்தை அடுத்து 2006, நவெம்பர் 16 அன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்.- மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான தவறான வரவு மீதி ரூபா 8,920,947 ஆன அதேவேளை தவறான செலவு மீதி ரூபா 85,479 ஆகும். இதன்படி தேறிய வரவு மீதி தொகையான ரூபா 8,835,468 மேற்குறித்த இரு மீதிகளையும் தீர்த்ததை அடுத்து ஐந்தொகையில் நடைமுறை சொத்துக்களின்கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

2.2.3 பங்களிப்புத் தொகைக் கொடுப்பனவு.- பல சந்தர்ப்பங்களில் விபரமான தள்ளுபடி பதிவேடுகள் நிதியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் மீளளிப்புகள் மேற்கொள்ளப்படுகையில் உறுதிசெய்யப்பட்டு அனுப்பிவைக்கப்படும் வருமான பதிவேடுகளைச் சார்ந்தே பங்களிப்புத் தொகைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட உரிய நிறுவகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. ஆகவே அத்தகைய கொடுப்பனவுகளின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் திருப்திகொள்ள முடியாதிருந்தது.

2.2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.- 2005, திசெம்பர் 01 அன்றே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2005 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீடு 1977, ஓகத்து 16 இன் 836 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை.- பங்களிப்பைச் செலுத்தவேண்டிய சகல நிறுவகங்கள் தொடர்பாகவும் வேறான ஓர் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் பங்களிப்பைச் செலுத்திய நிறுவகங்கள் தொடர்பாக மாத்திரம் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தன. இதன் விளைவாக கட்டாய பங்களிப்புத் தொகை அளவும் இதற்குரிய பெறவேண்டிய அரசாங்க பங்களிப்புத் தொகை எவ்வளவு என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.6 *நிதியங்களின் பரிமாற்றம்.-* மாகாண சபைகளினாலும் மாகாண சபைகளின்கீழ் இயங்கும் நிறுவகங்களினாலும் தாமாகவே கட்டாயப் பங்களிப்புத் தொகை செலுத்துவதில் தாமதம் நிலவியதை அவதானிக்கப்பட்டது. நிறுவகங்களால் உரிய காலத்தில் இத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு :**

3.1 ***நிதிசார் விளைவுகள்.-*** சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவு ரூபா 987,918,895 மிகையான அதேவேளை ஒதுக்கீட்டின் பின்னர் நிதிசார் விளைவு ரூபா 4,670,935 மிகையாகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் நிதிசார் விளைவு ரூபா 974,530,715 ஆன மிகையாக இருந்த அதேவேளை ஒதுக்கீட்டின் பின்னர் நிதிசார் விளைவு ரூபா 8,250,877 ஆன மிகையானமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் ஒதுக்கீட்டின் பின்னரான நிதிசார் விளைவு ரூபா 3,579,942 ஆன முன்னேற்றத்தைக் காண்பித்தது.

3.1.2 2005 ஆம் ஆண்டின் நிதிசார் விளைவுகளின்படி பங்கீட்டு இலாபம் ரூபா 958,548,253 ஆன போதிலும் இந்நிதியத்தின் முகாமைத்துவ சபையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி அரசாங்க பங்களிப்பின் மிகையிலிருந்து ரூபா 29,370,643 தொகையைப் பயன்படுத்தி பங்களிப்பாளர்களுக்கிடையே ரூபா 983,247,960 பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. பணச்சந்தையில் வட்டி வீதத்தின் தழம்பலின்போது அங்கத்தவர்களுக்கிடையே சாதகமான ஓர் விகிதத்தை பகிரும் நோக்கில் முகாமைத்துவ சபையினால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஓய்வூதியப் பணிப்பாளர் தெரிவித்திருந்தார்.

3.2 ***அங்கத்துவக் கணக்குகளில் உள்ள மீதிகள் பங்களிப்பாளர்களுக்கு அறிவித்தல்.-*** அரசாங்க சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவுற்றதை அடுத்து ஓய்வூதியப் பணம் பணிப்பாளரால் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கத்தவர்களின் கணக்குகளில் உள்ள மீதி பங்களிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். 2005, திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்நிதிய அங்கத்தவர்களின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 197,951 ஆன போதிலும், 34,587 ஒதுக்கிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் 2005, திசெம்பர் 31 இல் மீதி தயாரிக்கப்பட்டுள்ளது என எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அறவீட்டுப் பதிவேடுகள் கிடைக்கப்பெற்றிராமையாலும் ஒவ்வொரு பங்களிப்பாளர் தொடர்பாகவும் வெவ்வேறு கணக்குகள் நாளதுவரையாகப் பேணப்பட்டிராமையாலும் பல வருடங்களுக்கு மேலான காலமாக இருந்தே வருடத்தின் இறுதி மீதி அங்கத்தவர்களுக்கு அறிவிப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும் செயற்படும் மற்றும் செயற்படாத அங்கத்தவர்கள் வெவ்வேறாக இனங்காணக்கூடிய வகையில் அங்கத்தவர்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

4. ***முறைமைகளும் கட்டுப்பாடுகளும்.-*** பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது :

(அ) அறவீட்டுப் பதிவேடுகள் பெறுதல்
(ஆ) பங்களிப்புக் கட்டணம் பெறுதல்
(இ) பதிவேடுகள், புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் பேணல்
(ஈ) பிழையான வரவு மற்றும் செலவு மீதிகள் தீர்க்கப்படல்

பீ. ஏ. பேமதிலக,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

**2005.12.31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான அரச சேவை சேமலாப நிதிய கணக்குகள் சம்பந்தமான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மீதான அரச சேவை சேமலாப நிதிய முகாமைத்துவ சபையின் அவதானிப்புகள்**

2.2 ***நிதிக் கூற்றுக்கள் மீதான விளக்கமளிப்பு :***

2.2.1 *நிதிக் கூற்றுக்களை வெளிப்படுத்தல்.-* அவதானிப்புகளுடன் உடன்படுகின்றேன்.

2.2.2 *கணக்கீட்டு குறைபாடுகள்.-* 31.12.2005 ஆந் திகதியில் தவறுதலாக செலவு வைக்கப்பட்ட மொத்தத் தொகை ரூபா 8,920,946.57 ஆக இருப்பதுடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழான தொகை ரூபா 5,586,625.25 உம் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் கீழான தொகை ரூபா 56,283.95 உம் தீர்வு செய்யப்பட்டுள்ளது. அதன்படி 31.12.2005 ஆந் திகதியில் மேலும் தீர்வு செய்யப்பட வேண்டியுள்ள மீதித்தொகை ரூபா 3,278,037.37 ஆகும். இதில் ரூபா 2,703,434.05 என்ற பழைமையான தொகை முன்னைய மீதியாகக் கருதப்பட்டு கட்டம் கட்டமாக தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இந்த மீதிகளை தீர்வுசெய்யும்படி சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கும் திணைக்களங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருப்பினும் இந்த மீதிகளை தீர்வுசெய்வதற்கு உரிய நிறுவனங்களினால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமையினால் இத்தொகையை தீர்வுசெய்வதற்கு பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

*2.2.3 உறுப்புரிமை கட்டண மீளளிப்பு.- கழிப்பனவு பட்டியல் அனுப்பிவைக்காத நிறுவனங்களுக்கு மீளளிப்பு கொடுப்பனவு செய்யப்படும் சந்தர்ப்பங்களில், அவ்வருடத்தில் உறுப்புரிமை கட்டணம் மீளளிப்பிற்கு கோரிக்கை செய்யப்பட்டிருப்பின் அது தொடர்பில் உரிய நிறுவனத்தின் உறுதிப்படுத்தப்பட்ட கழிப்பனவு அறிக்கை பெறப்பட்டு கொடுப்பனவு செய்யப்படும். அதற்கான காரணம் கழிப்பனவு பட்டியல் பெறப்படுவது வருடத்திற்கு ஒரு முறை என்பதனால் ஆகும். எது எவ்வாறாயினும் கழிப்பனவு பட்டியல் பெற்றுக்கொள்வதற்கு சிரமமான சந்தர்ப்பங்களில் மட்டும் உறுதிப்படுத்தப்பட்ட கழிப்பனவு பட்டியலை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்படுவதற்காக நிதியின் செயலாளர் மற்றும் கணக்காளருக்கு அனுமதி வழங்க 24.08.2005 ஆந் திகதிய நிதிக் கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்தின்போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.*

*2.2.4 சட்டங்கள், விதிகள், நிதிப்பிரமாணங்களுக்கு உட்படாமை.- வரவு செலவு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. திறைசேரி சுற்றுநிருபம் 836 இல் குறிப்பிட்டுள்ளபடி ஓர் வரவு செலவு திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படாமைக்கான காரணம் ஓய்வூதிய திணைக்கள வருடாந்த மதிப்பீட்டினூடாக வழங்கப்படும் ஒதுக்கீட்டினை பிரயோகப்படுத்தி இந்த நிதி மீதான செலவு மேற்கொள்ளப்படுவதானாலும் வருடாந்த மதிப்பீட்டை தயாரித்து, ஓய்வூதிய திணைக்களத்தின் மதிப்பீட்டுடன் ஒன்றிணைத்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதனால் ஆகும்.*

*2.2.5 கணக்காய்விற்கான ஆதாரங்கள் இல்லாமை.- காசோலை மூலம் உறுப்புரிமை கட்டணம் செலுத்தும் நிறுவனங்கள் தொடர்பில் தனித்தனியான பதிவேடுகளை பாவிப்பதுடன் அதில் மாகாண சபைகள், ஏனைய செயற்திட்டங்களும் உள்ளடக்கப்படும். ஒவ்வொரு மாகாண சபைக்கு உட்பட்ட நிறுவனங்கள் வெவ்வேறாக இவ் ஏட்டில் பதிவுசெய்யப்படும். நிதியத்திற்கு உறுப்புரிமை கட்டணம் கிடைக்கப்பெறுவதாக இருந்தால் மாத்திரம் அவ் நிறுவனம் தொடர்பில் உரிய விபரங்கள் பதிவுசெய்யப்படும்.*

*அது போலவே சகல உறுப்புரிமை கட்டணங்கள் கிடைக்கப்பெறுவது தொடர்பில் ஏறத்தாழ 192 கோவைகள் வெவ்வேறான விடய எழுதுனர்களினால் கொண்டுநடாத்தப்படுகிறது. அக்கோவைகள் நாளாந்த அலுவல்களுக்காக தேவைப்படுவதனால் அதில் ஒரு பகுதி மாத்திரம் கணக்காய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய கோவைகள் தேவைப்பட்டிருப்பின் கணக்காய்விற்கு பெற்றுக்கொடுக்கக்கூடியதாக இருந்தது. திரட்டிய நிதியத்தை தவிர ஏனைய நிதியத்தினூடாக வேதனம் பெறும் வெளிநாட்டு வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும் நிறுவனங்களினால் மாத்திரம் 12% ஆன பங்கினை பெற்றுக்கொடுக்க முடிகின்றது. 2005 ஆம் ஆண்டு அவ் அலகு மொத்த நிதிப் பெறுவனவில் 0.5% ஆன சிறிய அளவினைக் கொண்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*2.2.6 உறுப்புரிமை கட்டணத்தைப் பெற்றுக்கொள்ளல்.- மாகாண சபை நிறுவனங்களினூடாக நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்படும் உறுப்புரிமை கட்டணம் தொடர்பில் பராமரிக்கப்படும் கோவைகள், பதிவேடுகளை அடிப்படையாகக் கொண்டு கழிப்பனவு பட்டியலை உபயோகப்படுத்தி நிதியத்திலிருந்து கொடை வழங்கல்கள் செலுத்தப்படுகின்றது. அதுபோலவே நிதியத்திற்கு உறுப்புரிமை கட்டணம் அனுப்பிய முறை தொடர்பாக உரிய நிறுவனங்கள் மூலம் கொடை வழங்கல் கோரும்போது தனித்தனியான அறிக்கை தயாரித்து முன்வைக்கப்படும். ஆகையினால் நிதியத்திற்கு கிடைக்கப்பெறாத நிதிக்காக நிதியத்திலிருந்து வட்டி கொடுப்பனவு செய்யப்பட மாட்டாது என்பதை தெரிவித்துக்கொள்வதுடன் அரச சேவை சேமலாப நிதிய சட்டத்திற்கமைய அங்கத்தவர்களின் கணக்குகளில் செலவு வைக்கப்பட்டுள்ள மீதித் தொகைகளை அடிப்படையாகக் கொண்டு வட்டிகள் வழங்கப்படும்.*

**3. நிதியும், நிதி செயற்பாட்டு நோக்கமும் :**

*3.1.2 நிதியத்திற்கு கிடைக்கப்பெறும் உறுப்புரிமை நிதியை முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கப்பெறும் வட்டி வருமானத்தை உபயோகப்படுத்தி உறுப்பினர்களுக்கு வட்டி ஒதுக்கீடு செய்யப்படுவதுடன் சந்தை நிலவரப்படி வட்டி விகிதம் நிர்ணயிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு சாதகமான வட்டி வீதத்தை ஒதுக்கீடு செய்யும் நோக்கில் கட்டுப்பாட்டு சபை மூலம் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.*

*3.2 **அங்கத்தவர்களுக்கு உறுப்பினர் கணக்கின் மீதியை அறிவித்தல்.**- தற்பொழுது 1999 ஆம் ஆண்டு வரையிலான உறுப்பினர்கள் கணக்கின் மீதி மாத்திரம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் புதிய கணனி செயற்திட்டம் ஒன்று தற்போது தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் சகல உறுப்பினர்களுக்குமான தரவுகள் பதியப்பட்டு மீதிகள் அறிவிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். அவதானிப்புகளுடன் உடன்படுகின்றேன்.*

கே. ஏ. திலகரட்ன,
ஓய்வூதிய பணிப்பாளர் நாயகமும், அரசசேவை
சேமலாப நிதிய முகாமைத்துவ சபையின் தலைவரும்.

9-823

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## மக்கள் வங்கி – எல்பிட்டிய (073) கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2007.10.26 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டதென இத்தால் அறியத்தரப்படுகிறது :-

"காலி பிரசித்த நொத்தாரிசு அஜன்தா கபுகமகே என்பவரால் அத்தாட்சிப்படுத்தியதும் 2005.09.16 ஆந் திகதிய 75 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியான கொடுப்பனவில் பேமத்து ஹேவாகே குணதிலக்க என்பவர் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது மேற்படி முறியின் மீது ஒரு இலட்சத்து தொண்ணூறாயிரத்து நூறு ரூபா (ரூ. 1,90,100) மக்கள் வங்கிக்கு வருமதியாகச் செலுத்தவேண்டியுள்ளபடியால் 2006.03.16 ஆந் திகதியில் இருந்து ஒரு வருடத்துக்கு 19.5 வீதப்படி ஒரு இலட்சத்து தொண்ணூறாயிரத்துநூறு ரூபா (ரூ. 1,90,100) மீது ஏலவிற்பனைத் திகதிவரை வட்டியையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் பிரிவின்கீழ் அறவிடப்படவேண்டிய பணத்தையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றைக் கழித்து ஒரு இலட்சத்து தொண்ணூறாயிரத்து நூறு ரூபா (ரூ. 1,90,100) அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜீ. பீ. ஆனந்த என்பவரால் 75 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

தென் மாகாணம், காலி மாவட்டம், கரன்தெனிய பிரதேச செயலாளர் பிரிவிலேயே ககபட (தெற்கு) பத்துவே நாபர அத்த கிராமசேவகர் பிரிவிலேயே, திவிதுரே என்ற கிராமத்தில் அமைந்துள்ள காலி நிலஅளவையாளர் அதிகாரியின் பொறுப்பில் இருக்கும் சர்வே ஜனரால் தயாரித்த 013/2 என்ற கலைப்பத்திரத்தின் மு. பி. கா. 2272 ஆம் இலக்கத்தின்படி வரைபட இலக்கம் 23 என்ற துண்டுக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஜி. டீ. யூ. கருணாரத்ன என்பவரால் அளந்து தயாரித்த இலக்கம் 634/2004 என்ற வரைபடத்தின் பிரகாரம் லொட் ஏ இருக்கும் துண்டுக்கான எல்லைகள்- வடக்கிற்கு : இலக்கம் 24 உம் 22 (வீதி) மற்றும் பீபீகா 2272 உம் ; கிழக்கிற்கு : துண்டு இலக்கம் 22 வீதி, பீபீகா 2272 இல் குறிப்பீடு ; தெற்கிற்கு : துண்டு இலக்கம் 23 உம் 24 உம், பீபீகா 2272 இல் குறிப்பிடும் மேற்கிற்கு : துண்டு இல. 23, 24 பி. பி. கா. 2272 இல் குறிக்கப்படும் நான்கு எல்லைகளுக்குள் ஒரு றூட் பத்து பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 10பே.) விசாலம் கொண்டது ஆகும். இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரம் மட்டைகள், பழங்கள் மற்றும் அனைத்தும் ஆகும்.

இக்காணி கீழ்குறிப்பிடும் காணியால் வேறுபடுத்திய துண்டு என்றபடியால் முறையான மாற்றுப்பதிவின் மூலம் ஒன்றுசேர்ப்பது நல்லதாகும் :-

தென் மாகாணம், காலி மாவட்டம், கரன்தெனிய பிரதேச செயலாளர் பிரிவிலேயே ககபட (தெற்கு) பத்துவே நாபர அத்த (193ஸீ) கிராமசேவகர் பிரிவிலேயே, திவிதுரேயில் அமைந்துள்ள காலி நிலஅளவையாளர் பொறுப்பில் இருக்கும் நிலஅளவையாளர் நாயகத்தால் தயாரித்த இலக்கம் 013/3 (86/12/02) என்ற கலைப்பத்திரத்தின் மு. பீ. கா. 2272 என்ற வரைபடத்தின் இலக்கம் 23 என்ற நிலத்துண்டுக்கு எல்லைகள்- வடக்கு : துண்டு இலக்கம் 25, 24 வீதி (22 உம்) ; கிழக்கிற்கு : (வீதி) (22) மு. பி. 13033/26 உம் ; தெற்கிற்கு : மு. பி. 13033/26 FSSUPO 13/42, மு. பி. 13033/28, வீதி (22 உம்) ; மேற்கிற்கு : மு. பி. 13033/28, துண்டு இலக்கம் 25 உம் 24 உம் ஆகும். இந்த எல்லைகளுக்குள் ஹெக்டயார் சைபர் தசம் ஆறு ஒன்பது இரண்டு (ஹெக்டயார் 0.692) விசாலம் காணப்படுகின்றது. இந்த எல்லைகளுக்குள் அமைந்துள்ள கட்டிடங்கள், மரம் மட்டைகள், பழங்கள் உட்பட அனைத்தும் கொண்ட காணித்துண்டு ஆகும். இக்காணித்துண்டு LDOH 22/06 இன்கீழ் காலி காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 22, கீழ் டிக்சன் வீதி,
காலி.

9-779

---

## மக்கள் வங்கி - தெனியாய கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர்கள் சபையால் 05.08.2008 ஆந் தேதி நடைபெற்ற அதன்கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது :-

"ஹொறகல கமகே சுமித் பிரியந்த என்பவர், மக்கள் வங்கியின் சார்பில் மாத்தறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ரி. என். ரூபசிங்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 22.11.2004 ஆந் திகதி கொண்ட 1970 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீதும் மாத்தறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ரி. என். ரூபசிங்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.03.24 ஆந் திகதி கொண்ட 3208 ஆம் இலக்க முறிமீதும் வருமதியான கொடுப்பனவில் தவணை தவறி உள்ளார் ஆதலால் சொல்லப்பட்ட 1970 மற்றும் 3208 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மீது இரண்டு இலட்சத்து எண்பத்தேழா யிரத்து முப்பத்தேழுரூபா அறுபத்துமூன்று சதம் (ரூ. 2,87.037.63) மாத்திரம் மற்றும் இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் (ரூ. 2,80,000) கொண்ட பணத் தொகை மாத்திரம் இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது.

சொல்லப்பட்ட இரண்டு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து முப்பத்தேழுரூபா அறுபத்துமூன்று சதம் (ரூ. 2,87,037.63) கொண்ட தொகையையும் அத்துடன் இரண்டு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து முப்பத்தேழுரூபா அறுபத்துமூன்று சதம் (ரூ. 2,87,037.63) கொண்ட தொகைமீது 23.01.2008 ஆந் திகதி முதல் விற்பனைத்திகதி வரை

ஆண்டொன்றுக்கு பத்தொன்பது தசம் இரண்டு ஐந்து சதவீத (19.25%) படியான வட்டியையும் அத்துடன் இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் (ரூ. 280,000 கொண்ட தொகையையும் அத்துடன் (இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் (ரூ. 280,000/-) கொண்ட தொகைமீது 27.01.2007 ஆந் திகதி முதல் விற்பனைத்திகதிவரை ஆண்டொன்றுக்கு இருபத்தொருசதவீத (21%) ப்படியான வட்டியையும் ஏலவிற்பனைச் செலவுகளையும் சொல்லப்பட்ட மக்கள் வங்கிச் சட்டத்தின் 29L ஆம் இலக்கப் பிரிவின் கீழ் மீளப்பெறப்படக்கூடிய பணங்களையும் அதன்பின் கொடுப்பனவு எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1970 மற்றும் 3208 ஆம் இலக்க ஈட்டுமுறிகளினால் மூலம் மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும், மாத்தறையைச் உரிமம் பெற்ற ஏலதாரர் ஜி. பி. ஆனந்த என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படல் வேண்டும் என மக்கள் வங்கிப் பணிப்பாளர்கள் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென்மாகாணம், மாத்தறை மாவட்டம், மொறவக் கோறளையின் கொட்டாப்பொல என்னுமிடத்தில் அமைந்துள்ளதும் மில்லஹென தெனிய மற்றும் ஹல்கஸ்முல்ல ஹேன என அழைக்கப்படுவதுமான காணியின் காணித்துண்டு A இன் காணித்துண்டு A4 அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு A முழுவதும், ஆனால் காணித்துண்டு A4 இன் காணித்துண்டு A எனப்பிழையாக சொல்லப்பட்டுள்ளது. அச்சொல்லப்பட்ட காணித்துண்டு A இன் எல்லைகள் ; வடக்கு : சி. ரணவீர என்பவரால் உரிமை கோரப்படும் காணி, கிழக்கு மற்றும் தெற்கு : அதே காணியின் பாகம் ; மேற்கு : தெனியாயவிலிருந்து அக்குரஸ்ஸ செல்லும் பிரதான வீதி, அத்துடன் கொட்டாப்பொல காணிப்பதிவகத்தில் G 38/293 இல் பதிவு செய்யப்பட்டதும் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஐ. கோட்டம்பகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 11.09.2004 ஆந்தேதிய 2183 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் இருபத்தெட்டுப் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 28பே) விஸ்தீரணம் கொண்டதுமான காணி அதிலுள்ள எல்லாக் கட்டிடங்கள், பயிர்வகைகள் மற்றுமெல்லாமும் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்-மாத்தறை.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
38/1, A எஸ்பிளனேட் வீதி,
மாத்தறை.

9-780

---

**மக்கள் வங்கி**

1982 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர்கள் சபையால் 05. 08.2008 ஆந் தேதி நடைபெற்ற அதன்கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது :-

''நடராஜா சிவனேசன், நடராஜா சிவபாலன், செல்வரட்ணம் மனோசிவானந்தன் மற்றும் பத்மநாதன் சுபோதினி என்போர் மக்கள் வங்கியின் சார்பில் மாத்தறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஈ.என். ரூபசிங்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 10.05.2006 ஆந் திகதி கொண்ட 3340 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலால், சொல்லப்பட்ட 3340 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது நாற்பத்தெட்டு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து எண்ணூற்றிரு பத்தாறு ரூபா அறுபது சதம் (ரூ. 48,32,826.60) கொண்ட தொகை இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளது.

சொல்லப்பட்ட நாற்பத்தெட்டு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து எண்ணூற்றிருபத்தாறு ரூபா அறுபது சதம் (ரூ. 4,832,826.60) கொண்ட தொகையையும் அத்துடன் நாற்பத்தெட்டு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து எண்ணூற்றி ருபத்தாறு ரூபா அறுபது சதம் (ரூ. 4,832,826.60) கொண்ட தொகைமீது 28. 12.2007 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு பத்தொன்பது சதவீத (19%) ப்படியான வட்டியையும் ஏலவிற்பனைச் செலவுகளையும் சொல்லப்பட்ட மக்கள் வங்கிச்சட்டத்தின் ''29L'' என்னும் பிரிவின் கீழ் மீளப்பெறப்படக் கூடிய பணங்களையும் அதன் பின்னர் கொடுப்பனவு எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 3340 ஆம் இலக்க ஈட்டுமுறியினால் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் மாத்தறையைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் ஜி. பி. ஆனந்த என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக் கின்றது.''

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மொறவக்கோறளையின் கொட்டப்பொல என்னும் இடத்தில் அமைந்துள்ளதும் நவதனி மறுபெயர் நைந்தாவ என அழைக்கப்படுவதுமான காணியின் காணித் துண்டுகள் 9, 10, 11, 12, 13, 14, 15 மற்றும் 16 என்பவற்றைக் கொண்ட அக்காணி முழுவதும். அத்துடன் அச்சொல்லப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : எல ; தெற்கு மற்றும் கிழக்கு : காணித்துண்டு 252 A (காடு) ; தெற்கு மற்றும் மேற்கு: ரீ. பீ. 283469 இல் உள்ள காணித்துண்டு 12 மற்றும் நைந்தாவ எஸ்ரேற்றின் ஒரு பாகமாக விருப்பதும், பீரிஸ் அப்புவினால் உரிமை கோரப்படுவதுமான காணித் துண்டு 11 A அத்துடன் மொறவக்க காணிப் பதிவகத்தில் G 26/277 இல் பதிவு செய்யப்பட்டதும் உத்தரவுபெற்ற அளவையாளர் ஜே. டபிள்யு. டி. நீஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 19,20,21. 02.1932 ஆந் திகதிகளைக் கொண்ட 78 ஆம் இலக்க வரைபடத்தல் காட்டப்பட்டுள்ளதும், நாற்பது ஏக்கர்கள் மூன்று றூட்டுக்கள் முப்பத்திரண்டு பேர்ச்சுகள் (40ஏ. 3றூ. 32பே) விஸ்தீரணம் கொண்டதுமான காணி, அதிலுள்ள எல்லாக் கட்டிடங்கள், பயிர்வகைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்-மாத்தறை.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
38/1, A எஸ்பிளனேட் வீதி,
மாத்தறை.

9 -781

### மக்கள் வங்கி – லக்கி பிளாஸா கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் பின்வரும் தீர்மானம் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் 2008.06.27 ஆந் திகதியன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"பாலசுப்பிரமணியம் சேகர் மக்கள் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திருமதி ஏ. டபிள்யு. ஆர். எஸ். அபேரத்ன அத்தாட்சிப்படுத்திய 2006.10.12 ஆந் திகதி கொண்ட 1933 ஆம் இலக்க ஈட்டு முறியின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது மேற்படி 1933 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது எட்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா ஆறு சதம் (ரூ. 8,50,000.06) கொண்ட தொகை தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளது. ஆதலால் எட்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா ஆறு சதத்தையும் (ரூ. 8,50,000.06) எட்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா ஆறு சதம் (ரூ. 8,50,000.06) கொண்ட தொகை மீது 2007.07.17 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு இருபது தசம் ஐந்து சதவீதப்படி (20.5%) மேலும் வட்டியையும் செலவு களையும் வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1933 ஆம் இலக்க ஈட்டுமுறியினால் சொல்லப்பட்ட மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஏர்வின் பெரேரா என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என மக்கள் வங்கி பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

#### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்த ஹேவாஹெட்ட, கந்தஹய கோறளை தெற்கு II, உட தெல்தொட்ட கிராமத்தில் அமைந்துள்ளதும் ''லிற்றில் வெலி அன்ட் ஹைட் எஸ்டேட்'' என அழைக்கப்படுவதுமான தோட்டத்திலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. ஆர். ரி. பீ. ரத்நாயக தயாரித்த 2006, யூலை 15 ஆம் திகதிகொண்ட 3998 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 1 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : மேற்படி 933 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 3 என்பதன் பாகம் ; கிழக்கில் : 933 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 3 என்பதன் எஞ்சிய பாகம் ; தெற்கில் : நீரோடை ; மேற்கில் : வீதி என்பன அமைந்துள்ளன. மேற்படி 3998 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு ஒரு றூட் இருபது பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 20பே.). இது கண்டி காணிப்பதிவகத்தில் G 430/63 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி காணி கீழே விவரிக்கப்படும் காணியின் ஒரு பாகமாகும்.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்த ஹேவாஹெட்ட, கந்தஹய கோறளை தெற்கு II, உட தெல்தொட்ட கிராமத்தில் அமைந்துள்ளதும் ''லிற்றில் வெலி அன்ட் ஹைட் எஸ்டேட்'' என அழைக்கப்படுவதுமான தோட்டத்திலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. ஆர். ரி. பீ. ரத்நாயக தயாரித்த 1994, திசெம்பர் 14 ஆம் திகதிகொண்ட 933 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 3 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : எஞ்சிய பாகத்தைப் பிரிக்கும் மரத்தூண் ; கிழக்கில் : நீரோடை ; தெற்கிலும் தென் மேற்கிலும் : பாதை ; மேற்கில் : துண்டுகள் 1 மற்றும் 2 என்பன அமைந்துள்ளன. மேற்படி 933 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு ஒரு எக்கர் இருபத்தொன்று தசம் ஏழு பேர்ச்சஸ் (1ஏ. 0றூ. 21.7பே.) இது கண்டி காணிப்பதிவகத்தில் G 345/86 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கெல்லையில் வீதிக்கென ஒதுக்கப்பட்ட காணியின்மீதும் அதன் வழியாகவும் வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கொழும்பு வடக்கு மற்றும் தெற்கு.

மக்கள் வங்கி,
வலயத் தலைமையலுவலகம், (மேற்கு வலயம் 01),
இல. 11, டியூக் வீதி,
கொழும்ப 1.

9 - 782

---

### மக்கள் வங்கி - காலி மக வீதி

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர்கள் சபையால் 2006.11.17 ஆந் தேதி நடைபெற்ற அதன்கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படு கின்றது :-

''காலி பிரசித்த நொத்தாரிசு ஸீ. லமாஹேவா என்பவரால் 2004. 02. 03 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 1003 என்ற ஈட்டு முறி மற்றும் 2005.08.11 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 534 என்ற ஈட்டு முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவில் வீரஸிங்க ஆரச்சிகே கிரிசாந்த புஸ்பகுமார மற்றும் கிரியா பதுகே சன்றலதா என்பவர்கள் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது மேற்படி முறிகளின் மீது ஒரு இலட்சத்து எழுபத்து நாலாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து மூன்று ரூபா இருபத்து நாலு சதம் (ரூ. 1,74,973.24) மற்றும் இருபத்தி எட்டு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா (ரூ. 28,25,000) மக்கள் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ளபடியால் 2006.03.21 ஆந் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்கு 17.25 வீதப்படி ஒரு இலட்சத்து எழுபத்து நாலாயிரத்து தொளாயிரத்து எழுபத்து மூன்று ரூபா இருபத்தி நாலு சதம் (ரூ. 1,74,973.24) பணத்தையும் மற்றும்

2006.03.21 ஆந் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்கு 16.5 வீதப்படி இருபத்தி எட்டு இலட்சத்து இருபத்தையாயிரம் (ரூ. 28,25,000) பணத்தையும் மற்றும் ஏல விற்பனைத்திகதி வரை மேலும் வட்டியையும் மக்கள் வங்கிச்சட்டத்தின் 29 எல் (29L) பிரிவின்கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட இருப்பின் அவற்றைக்கழித்து ஒரு இலட்சத்து எழுபத்திநாலாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தி மூன்று ரூபா இருபத்தி நாலு சதம் (ரூ. 1,74,973.24) மற்றும் இருபத்தி எட்டு லட்சத்து இருபத்தையாயிரம் (ரூ. 2,82,000) பணம் அறவிடுவதற்காக அதிகாரம் பெற்ற ஏலதாரர் ஜி. பி. ஆனந்த என்பவரால் இலக்கம் 1003 மற்றும் 534 என்ற ஈட்டு முறிகளின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச்சட்டத்தால் அதற்குறித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி கடவத்சதரயில் படதுவயில் அமைந்துள்ள ஹரமானிஸ்கேவத்த அல்லது பெலவத்த என்ற காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. நிஸ்ஸங்க என்பவரின் இலக்கம் 680 மற்றும் 2001.04.26 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் இலக்கம் 5 என்ற துண்டுக்கான எல்லைகள் - வடக்கிற்கு : இக்காணியின் இலக்கம் 4 என்ற துண்டும் ; கிழக்கிற்கு : லுனுவிலவத்த வீதியும் மற்றும் உடவத்தயும் ; தெற்கிற்கு : உடவத்தயும் ; மேற்கிற்கு : இக்காணியின் 1/4 பங்குத் துண்டும் இக்காணியின் எல்லைகளாகும். இக்காணியின் எல்லைக்குள் பதினேழு தசம் ஐந்து எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 17.58பே.) விசாலமுடைய காணியில் இருக்கும் மரம், மட்டைகள், பழவகை, பயிர்கள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும். இக்காணித்துண்டு காலி காணிப்பதிவகத்தில் இலக்கம் 599/ 226 இன்கீழ் பதிவுசெய்யப் பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 22, கீழ் டிக்சன் வீதி,
காலி.

9 - 783

---

**பேன் ஏசியா வங்கிக் கோப்பரேஷன் பீஎல்சீ**
**(PABC வங்கி)**

(நுகேகொடை கிளை) — சமரசிங்க ஆராச்சிகே சிசிர குமார பெரேராவும், பெட்டே கங்கானமகே சரத் குமாரவும்-சவாறி ஏஜென்சீஸ் பங்காளிகள்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், பேன் ஏசியா வங்கிக் கோப்பரேஷன் பீஎல்சி, பணிப்பாளர் சபையில் 2008.01.31 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

" சவாறி ஏஜென்சீஸ் பங்காளர்களான சமரசிங்க ஆராச்சிகே சிசிர குமார பெரேராவும், பெத்தே கங்கானமகே சரத் குமாரவும் பேன் ஏசியா வங்கிக் கோப்பரேஷன் பீஎல்சீ (முன்னர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கிக் கோப்பரேஷன் என்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி என்றும் அழைக்கப்பட்டது) சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு நீல் ராஜகருணா ஹேவதன்ரி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, யூலை 07 ஆந் திகதியிடப்பட்ட முறி இலக்கம் 802 படியும், 2005.09.07 ஆந் திகதியிடப்பட்ட முறி இலக்கம் 836 படியும் (பதிவிலக்கம் PQ 48) செலுத்தத் தவறியுள்ளார். ஆதலால் 2006, செத்தெம்பர் 11 ஆந் திகதி வரை பேன் ஏசியா வங்கிக் கோப்பரேஷன் பீஎல்சீ க்கு (இதன் பின் சில வேளைகளில் "பீஏபிசி வங்கி" என அழைக்கப்படும்) முதலும் வட்டியுமாக எட்டு இலட்சத்து இருநூற்றுநாற்பது ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூ. 8,00,240.56) அத்துடன் ஏழு இலட்சத்து இருபத்தோராயிரத்து தொளாயிரத்தெண்பத்து மூன்று ரூபா பதினெட்டு சதம் (ரூ. 7,21,983.18) வருடமொன்றுக்கு இருபத்தைந்து வீத (25%) வட்டியுமாக 2006, செத்தெம்பர் 12 ஆந் திகதி முதல் மேற்குறிப்பிட்ட முறியின் கடைசி கொடுப்பனவு வரை செலுத்த வேண்டியுள்ளது ;

அதன் பிரகாரம் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்படி இல. 24, டொரிங்டன் வீதி, கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் அன்ட் சமரவிக்கிரம அவர்களால் பீஏபிசி வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு கூறப்பட்ட சொத்துக்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய அதிகாரம் வழங்கப்பட்டு, முறிகளிலக்கம் 802, 836 படி எட்டு இலட்சத்து இருநூற்றுநாற்பது ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூ. 8,00,240.56) அத்துடன் 2006, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை கூறிய வட்டியும் விளம்பரச் செலவுகளையும் வேறு அறவீடுகளையும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) கீழ் உரித்தாகும்."

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியானே கோரல, அதிகாரி பற்று பின்னமேட கிராமம், "ராணிமடாம தோட்டம்" என்றழைக்கப்பட்ட காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சுகத் சமரவிக்ரம அவர்களால் 14.06.2005 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 116/2005 படி, லொட் 51பி என அடையாளமிடப்பட்ட பகுதி- வடக்காக : ஹுணுப்பிட்டிய முதல் மகர சந்தி வரையுள்ள பாதையும் ; கிழக்காக : பீபீ-10152 இல் லொட் எம்660 ; தெற்காக : வரைபடம் பீ. பீ. ஏ. ஏ4659 இல் லொட் 53 : மேற்காக : வரைபடம் இலக்கம் 113/ 1997 இல் லொட் 51ஏ- உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சுகத் சமரவிக்ரம அவர் களால் தயாரிக்கப்பட்டது. பன்னிரண்டு தசம் ஆறு ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 12.65பே.).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஜீ. ஏ. ரஞ்சித் பெரேரா,
சிரேஷ்ட முகாமையாளர் - மீளப்பெறுதல்.

9-838

**செலான் வங்கி ப.வ.க.**

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

(திருகோணமலை கிளை) - கணக்கு இல. : 0880-பீ90989-001

1990 ஆம் ஆண்டில் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2008.06.09 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமன தாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"திருகோணமலையைச் சேர்ந்த அமரசிங்க ஆரச்சிகே தயானந்த என்பவர் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். என். கே. மாம்பிட்டிய என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, ஓகத்து 17 ஆந் திகதிய 1489 ஆம் இலக்க மற்றும் 2005, நவெம்பர் 14 ஆந் திகதிய 1558 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால், இப்பொழுது 2007, திசெம்பர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது ஒரு கோடி அறுபத்தேழு இலட்சத்து தொண்ணூற்றோராயிரத்து ஐந்நூற் றெண்பத்தொன்பது ரூபா எண்பத்தெட்டு சதம் (ரூ. 1,67,91,589.88) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ஒரு கோடி அறுபத்தேழு இலட்சத்து தொண்ணூற்றோராயிரத்து ஐந்நூற்றெண்பத்தொன்பது ரூபா எண்பத்தெட்டு சதம் (ரூ. 1,67,91,589.88) பணத்தொகையையும் 2008, சனவரி 01 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்தைந்து சதவீதப்படி (35%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1489 மற்றும் 1558 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலை பிரதேச செயலாளர் பிரிவில் திருகோணமலைப் பட்டினமும் சூழலும் பிரதேச சபை எல்லைகளினுள் கவடிக்குடாக் கிராமத்தில் அமைந்துள்ள தெகிலுட்டுக்கடு என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. செல்லப்பிள்ளை என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004.11.30 ஆந் திகதிய 4054 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட துண்டு 1 எனக் காட்டப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தோப்புக்கள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகள்- வடக்கு : திருகோணமலை-கண்டி வீதி ; கிழக்கு : றொசலின் நோனாவால் உரிமைகோரப்படும் எல்டிஓ காணி ; தெற்கு : அரச காணி ; மேற்கு : கயன் உல்லஸ்ஹேவகேயால் உரிமைகோரப்படும் எல்டிஓ காணி. சொல்லப்பட்ட 4054 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு றூட் ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 6பே.) விஸ்தீரணமுள்ள இது திருகோணமலை காணிப்பதிவகத்தில் எல்டீ/டிஜீ /26/118 ஆம் உரித்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எம். கே. பிரேமதிலக,
உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்.

9-785

---

**செலான் வங்கி ப.வ.க.**

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

(மட்டக்களப்பு கிளை) - கணக்கு இல. : 0730-01248635-001

1990 ஆம் ஆண்டில் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2008.07.25 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமன தாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. ரன்டொல்ஃப் கிரகறி அன்ட்ராடோ மற்றும் திருமதி இசபெல்லா அன்ட்ராடோ ஆகியோர் 'கடனெடுத்தவர்கள்' என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு என். வேலுப்பிள்ளை என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2004, திசெம்பர் 03 ஆந் திகதிய 361 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலால், இப்பொழுது 2007, செத்தெம்பர் 27 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின்மீது இருபது இலட்சத்து முப்பத்தோராயிரத்து நானூற்றெண்பத்தொரு ரூபா தொண்ணூற்று மூன்று சதம் (ரூ. 20,31,481.93) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட இருபது இலட்சத்து முப்பத்தோராயிரத்து நானூற்றெண்பத்தொரு ரூபா தொண்ணூற்றுமூன்று சதம் (ரூ. 20,31,481.93) பணத்தொகையையும் 2007, செத்தெம்பர் 28 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்தைந்து சதவீதப்படி (35%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 361 ஆம் இலக்க முறியினால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற

ஏலதாரர் திரு. ஐ. டபிள்யு. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில், மண்முனைப்பற்றுவில் பிரதேச செயலகப் பிரிவினுள், கூழாவடியில் தாண்டவன்வெளி கிராமத்தில் அமைந்துள்ளதும் பீபீஏ/1449 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 144 எனக் காட்டப்பட்டதுமான குடியிருப்புப் பூமி என்றழைக்கப்படும் பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் உள்ளடக்கப்பட்ட ஏனைய எல்லா உரிமைகளுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : துண்டு இல. 131 ; கிழக்கு : முடிக்குரிய காணி ; தெற்கு : துண்டு இல. 145 ; மேற்கு : வீதி. இருபது (20) பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ள இது மட்டக்களப்பு காணிப்பதிவகத்தில் எம்என்/01/15/98 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலே சொல்லப்பட்ட ஆதனம் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. சிங்கராஜாவால் வரையப்பட்ட 2004.04.08 ஆந் திகதிய ஏஎஸ்/2003/288 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது :-

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில், மண்முனைப் பற்றுவில், மண்முனை வடக்கு, பிரதேச செயலகப் பிரிவினுள், மாநகர சபையினுள், வட்டாரம் இல. 12 இல் கூழாவடி கிராமத்தில், கூழாவடி 1 ஆம் குறுக்கு ஒழுங்கையில் அமைந்துள்ளதும் வரிமதிப்பீட்டு இலக்கம் 17 கொண்டதும் பீபீஏ/1449 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 144 எனக் காட்டப்பட்டதுமான குடியிருப்புப் பூமி என்றழைக்கப்படும் பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் உள்ளடக்கப்பட்ட ஏனைய எல்லா உரிமைகளுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : பீபீஏ 1449 இல் துண்டு இல. 131 ; கிழக்கு : 1 ஆம் குறுக்கு ஒழுங்கை ; தெற்கு : பீபீஏ 1449 இல் துண்டு இல. 131 ; மேற்கு : 2 ஆம் குறுக்கு ஒழுங்கை. இது இருபது (20) பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எம். கே. பிரேமதிலக,
உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்.

9-786/1

---

### செலான் வங்கி ப.வ.க.

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0400-04001421-101-(சரிக்கமுல்ல கிளை)

1990 ஆம் ஆண்டில் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2008.04.28 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''பண்டாரகமவைச் சேர்ந்த பமுனுசிங்க ஆரச்சிகே மில்டன் பீரிஸ் என்பவர் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு ரீ. பீ. கருணாசேகர என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2001, மாச்சு 23 ஆந் திகதிய 482 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால், இப்பொழுது 2007, மே 31 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின்மீது நான்கு இலட்சத்து மூவாயிரத்து எழுநூற்றறுபத்து நான்கு ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 4,03,764.59) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட நான்கு இலட்சத்து மூவாயிரத்து எழுநூற்றறுபத்து நான்கு ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 4,03,764.59) பணத்தொகையையும் 2007, யூன் 01 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்திமூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 482 ஆம் இலக்க முறியினால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

1. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் ரைகம் கோறளேயின் மெதகமபத்துவில் அமைந்துள்ள அந்துன்வென்னஹேன, வல்கம்கெலே அல்லது பட்டபொத்தகலே என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சிரில் விக்கிரமகேயால் தயாரிக்கப்பட்ட 1988.11.13 ஆந் திகதிய 497 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : வரைபடம் இல. 4100 இல் துண்டு 5 ; கிழக்கு : வரைபடம் இல. 497 இல் துண்டு 3 ; தெற்கு : வரைபடம் இல. 497 இல் துண்டு 4 மற்றும் வரைபடம் இல. 477 இல் துண்டு 6டீ ; மேற்கு : வரைபடம் இல. 497 இல் துண்டு 1. சொல்லப்பட்ட 497 ஆம் வரைபடத்தின்படி இது பன்னிரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 12பே.) விஸ்தீரணமுள்ளது.

சொல்லப்பட்ட துண்டு 2 இப்போது சிரில் விக்கிரமகேயால் தயாரிக்கப்பட்ட 2000.12.31 ஆந் திகதிய 497/2 ஆம் இலக்க வரைபடத்தில் மீள அளவிடப்பட்டுக் காட்டப்பட்டுள்ளதுடன் பின்வருமாறு முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது ;

2. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் ரைகம் கோறளேயின் மெதகமபத்துவில் அமைந்துள்ள அந்துன்வென்னஹேன, வல்கம்கெலே அல்லது பட்டபொத்தகலே என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சிரில் விக்கிரமகேயால் தயாரிக்கப்பட்ட 2000.12.31 ஆந் திகதிய 497/2 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான

காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள்- வடக்கு : வரைபடம் இல. 4100 இல் துண்டு 5 ; கிழக்கு : வரைபடம் இல. 497 இல் துண்டு 3 ; தெற்கு : வரைபடம் இல. 497 இல் துண்டு 4 மற்றும் வரைபடம் இல. 477 இல் துண்டு 6டீ ; மேற்கு : வரைபடம் இல. 497 இல் துண்டு 1. சொல்லப்பட்ட 497/2 ஆம் வரைபடத்தின்படி இது பன்னிரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 12பே.) விஸ்தீரணமுள்ளது. அதனுடன் பின்வரும் காணியின் மேலாகவும் ஊடாகவும் வழிஉரிமையும் அதற்கு உரித்தான ஏனைய பொது உரிமைகளும் கொண்டதாக ;

மேலே சொல்லப்பட்ட மெகமவில் அமைந்துள்ள மிட்லன்வத்த என்றழைக்கப்படும் காணி தொடர்பில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சிரில் விக்கிரமகேயால் தயாரிக்கப்பட்ட 1988.09.26 ஆந் திகதிய 477 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 6டி (வீதிக்கான ஒதுக்கம்) எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும். இதன் எல்லைகள்- வடக்கு : வரைபடம் இல. 477 இல் துண்டுகள் 6ஏ, 6பீ மற்றும் 6சி ; கிழக்கு : வல்கம்கெலே என்றழைக்கப்படும் காணி ; தெற்கு : துண்டு 7 ; மேற்கு : பிரதான வீதியிலிருந்து வல்கமவுக்கான ப. ச. வீதி. இது பதின்மூன்று தசம் சைபர் இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 13.02பே.) விஸ்தீரணமுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எம். கே. பிரேமதிலக,
உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்.

9-786/2

---

**வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ யால் [பதிவு இல. PQ 118] நிறைவேற்றட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி பின்வரும் தீர்மானம் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ யின் [பதிவு இல. PQ 118] பணிப்பாளர் சபையால் 2008, மே 29 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"கொழும்பு 2, யூனியன் பிளேஸ் 75 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த தனஞ்சய செனரத் லக்சுமணகே (இதனகத்துப்பின்னர் "ஈடுவைத்தவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சத்தூரி பிரியதர்ஷிகா ரொட்ரிகோ ரணசிங்க அத்தாட்சிப்படுத்திய 2002, ஒற்றோபர் 11 ஆந் திகதி கொண்ட 2966 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது (இதனகத்துப் பின்னர் "முறி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மேற்கூறப்பட்ட ஈடுவைத்தவரால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள்கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 2, யூனியன் பிளேஸ், 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த (முன்னர் கொழும்பு 1, யோர்க் வீதி, 76 ஆம் இலக்கம்) (முன்னர் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி என அறியப்பட்ட) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீயின் (இதனகத்துப்பின்னர் "வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சார்பில் ஈடும் அடைமானமும் வைத்துள்ளார் ஆதலாலும்

மேற்கூறப்பட்ட ஈடுவைத்தவர் மேற்படி முறியின்பேரில் பெறப்பட்ட கடன் வசதிகளின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது 2008.05.20 ஆந் திகதியன்றுள்ளவாறு மேற்படி முறியின்மீது இருபது இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து ஐநூற்றி நாற்பது ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூபா 20,68,540.38) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது ஆதலாலும்

மேற்படி இருபது இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து ஐநூற்றி நாற்பது ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூபா 20,68,540.38) 2008.05.20 ஆந் திகதியன்றுள்ளவாறு வீடமைப்புக் கடன்மீது நிலுவையிலிருக்கும் முதல் பத்தொன்பது இலட்சத்து இருபத்தையாயிரத்து முந்நூற்றி முப்பத்தாறு ரூபா எண்பது சதத்தின்மீது (ரூபா 19,25,336.80) 2008.05.21 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 22.50% சதவீதப்படி மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச்சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் திரிவங்க அன்ட் சேனநாயக ஆக்ஷனியார்ஸால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லே பற்று கல்கிசை பதிவகப் பிரிவிற்குட்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை எல்லைகளுக்குட்பட்ட பெத்தேகனயில் தற்பொழுது பெத்தகன கிழக்கு - பிட்ட கோட்டேயில் அமைந்துள்ளதும் திம்பிரிகஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. டீ. சீ. ஹீன்தெனிய தயாரித்த 1994, யூன் 29 ஆந் திகதி கொண்ட 698 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள வீடு, கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 2 என்பதற்கு எல்லைகளாக : வடக்கில் : 698 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 1 ; கிழக்கில் : வேஹெரகந்த வீதி 60 ஆம் 64 ஆம் வரிமதிப்பீட்டிலக்க வளவுகள் ; தெற்கில் : 698 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 3 ; மேற்கில் வேஹெரகந்த வீதி என்பன அமைந்துள்ளன, மேற்படி 698 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 3 ; மேற்கில் வேஹெரகந்த வீதி என்பன அமைந்துள்ளன. மேற்படி 698 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பத்து தசம் ஆறு சைவர் பேர்ச்சஸ் (0ஏ.0றூ.10.60பே.) அல்லது 0.0268 ஹெக்டேயர். இது கல்கிசை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் M 2288/115 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ii) மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லே பற்று கல்கிசை பதிவகப் பிரிவிற்குட்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை எல்லைகளுக்குட்பட்ட பெத்தேகனயில் தற்பொழுது பெத்தகன கிழக்கு - பிட்ட கோட்டேயில் அமைந்துள்ளதும் வேஹெரகந்த வீதி 48/3 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் திம்பிரிகஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியில்

உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. டீ. சீ. ஹீன்தெனிய தயாரித்த 1994, யூன் 29 ஆந் திகதிகொண்ட 698 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்தள்ள வீடு, கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 3 என்பதற்கு எல்லைகளாக- வடக்கில் : 698 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 2 ; கிழக்கில் : வேஹெரகந்த வீதி 60 ஆம் 64 ஆம் வரிமதிப்பீட்டிலக்க வளவுகள் ; தெற்கில் : 698 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 4 ; மேற்கில் வேஹெரகந்த வீதி என்பன அமைந்துள்ளன. மேற்படி 698 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு ஒன்பது தசம் ஏழு சைவர் பேர்ச்சஸ் (0ஏ.0றூ.9.70பே.) அல்லது 0.0245 ஹெக்டேயர். இது கல்கிசை காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் M 2288/116 என்பதில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட காணியின் பாவிப்புரித்துடன் சேர்த்து-

மேற்கூறப்பட்ட பெத்தகனயில் தற்பொழுது பெத்தகன கிழக்கு பிட்டகோட்டையில் அமைந்துள்ளதும் திம்பிரிகஹாவத்த என அழைக்கப்படுவதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். குமாரசுவாமி தயாரித்த 1959, யூன் 28 ஆந் திகதிகொண்ட 158 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 18 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு முழுவதும் (வீதிக்கென ஒதுக்கப்பட்டது) (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. ரொட்ரிகோ தயாரித்த 1916, திசெம்பர் 20 ஆந் திகதிகொண்ட 1376 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு A என்பதன் உட்பிரிவொன்று). மேற்படி துண்டு 18 என்பதற்கு எல்லைகளாக- வடக்கில் : துண்டுகள் 16, 12, மேலும் சரியாக துண்டு 2 மற்றும் கி. ச. வீதி ; கிழக்கில் : 1 முதல் 8 வரையிலான துண்டுகள் ; தெற்கில் : துண்டுகள் 1, 14, 15, 17, 9 ; மேற்கில் : துண்டுகள் 9, 14, 16, 17 மற்றும் கி. ச. வீதி அத்துடன் மல்லிகா ஆராச்சிகே ஹெலெனா பெரேராவுக்குரிய காணி என்பன அமைந்துள்ளன. மேற்படி 158 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு ஒரு றூட் மூன்று தசம் ஐந்து இரண்டு பேர்ச்சஸ் (0ஏ.1றூ. 3.52பே.). இது கல்கிசை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் M 2102/64 என்பதில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

9- 791/1

---

## வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ யால் [பதிவு இல. N(PBS) 805] நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி பின்வரும் தீர்மானம் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ யின் [பதிவு இல. N (PBS) 805] பணிப்பாளர் சபையால் 2007, திசெம்பர் 19 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"பத்தரமுல்ல உடுமல்ல வீதி, 513/1 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த லசந்த தம்மிக்க ரஞ்சுமால் பீரிஸ் விஜேமான்ன என்பவர் (இதனகத்துப்பின்னர் ''ஈடுவைத்தவர்'' எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். தமயந்தி வீரசேகர அத்தாட்சிப்படுத்திய 2004, செத்தெம்பர் 21 ஆந் திகதி கொண்ட 66 ஆம் இலக்க ஈட்டுமுறியினால் இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 2, யூனியன் பிளேஸ், 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த (முன்னர் கொழும்பு 1, யோர்க் வீதி, 76 ஆம் இலக்கம்) வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி சார்பில் ஈடும் அடைமானமும் வைத்துள்ளார் ஆதலாலும்

சொல்லப்பட்ட ஈடுவைத்தவர் மேற்படி முறியின்பேரில் பெறப்பட்ட கடன் வசதிகளின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது 2007.11.09 ஆந் திகதியன்றுள்ளவாறு மேற்படி முறியின்மீது எட்டு இலட்சத்து பத்தாயிரத்து இருநூற்றி எண்பத்துநாலு ரூபா ஏழு சதம் (ரூபா 8,10,284.07) வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது ஆதலாலும்

மேற்படி எட்டு இலட்சத்து பத்தாயிரத்து இருநூற்றி எண்பத்துநாலு, ரூபா ஏழு சதத்தையும் (ரூபா 8,10,284.07) 2007.11.09 ஆந் திகதியன்றுள்ளவாறு வீட்டுக் கடன்மீது நிலுவையிலிருக்கும் முதல் ஏழு இலட்சத்து ஐயாயிரத்து இருநூற்றி நாற்பத்தேழு ரூபா அறுபத்தொன்பது சதத்தின்மீது (ரூபா 705,247.69) 2007.11.10 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 19.68 சதவீதப்படி மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச்சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் திரிவங்க அன்ட் சேனநாயக ஆக்ஷனியார்ஸால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, மெத பற்று அத்தனகல்ல பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட கட்டுவஸ்கொட கிராமத்தில் அமைந்துள்ளதும் கொடபாரகஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். பி. ஆர். பத்திராஜ தயாரித்த 1993, ஒகத்து 19 ஆந் திகதிகொண்ட 117 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 3 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : டீ. பி. டீ. திசநாயகவின் புரானகும்புற மற்றும் எம். பி. சுனில் அமரசிங்கவினதும் ஏனையோரினதும் கொறகஹாவத்த ; கிழக்கில் : டப்ளியூ. பி. லயனலின் காணி ; மற்றும் இதன் துண்டுகள் 2

ஏ மற்றும் 4 ; மேற்கில் : இதன் துண்டு 4 மற்றும் டீ. பி. டீ. திசநாயகவின் புரானகும்புற என்பன அமைந்துள்ளன. மேற்படி 1117 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு முப்பத்தாறு தசம் ஏழு பேர்ச்சஸ் (0ஏ.0றூ.36.7பே.) அல்லது 0.0928 ஹெக்டேயர். இது கம்பஹா மாவட்டக் காணிப் பதிவகத்தில் பக்கம்/தொகுதி ஈ 685/154 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### இரண்டாம் அட்டவணை

வெளிப்படுத்துநருக்கும் அவரது மேற்கூறப்பட்டவர்களுக்கும் அப்போதைக்கும் காலத்துக்குக் காலமும் சொந்தக்காரருக்கும் அல்லது சொந்தக்காரர்களுக்கும் கீழே விவரிக்கப்படும் பாதைகளினதும் திருப்புச் சுற்றுவட்டத்திலும் கட்டுப்பாடற்ற முழு உரிமை, சுதந்திரம் மற்றும் அவர்களது வாடகைக் குடியிருப்பாளர்களுக்கும் வேலையாட்களுக்கும் விருந்தினர்களுக்கும் உரிமம் வைத்திருப்பவர்களுக்கும் கீழே விவரிக்கப்படும் வீதியையும் அதன் ஏதேனும் பாகத்தையும் காலத்துக்குக் காலமும் எல்லா நேரங்களிலும் பகலில் அல்லது இரவு நேரங்களில் அவர்களின் விருப்பப்படி (பொதுவில் இதேபோன்ற உரிமைகொண்ட ஏனையோர் சகிதம்) மந்தைகளுடன் அல்லது மந்தைகளின்றி அல்லது வேறு விலங்குகளுடன் அல்லது விலங்குகளின்றி சுமை ஏற்றப்பட்ட அல்லது சுமை ஏற்றப்படாத மோட்டார் கார்களுடன், லொறிகளுடன், வண்டிகளுடன், கரத்தைகளுடன் அல்லது வேறு வாகனங்களுடன் அத்துடன் ஏற்றிச் செல்லும் சாதனங்களுடன் கடந்து செல்லவும் திரும்பி வரவும் ஊடாகச் செல்லவும் திரும்பி வரவும் கீழே விவரிக்கப்படும் வீதிகளின் அல்லது அவற்றின் ஒவ்வொரு பாகத்தினதும் முழுப்பாவனையுடன் துய்த்தலுடனும் தொடர்புடைய ஏதேனும் நோக்கத்திற்கு கீழே விவரிக்கப்படும் வீதிகளிலும் அவற்றின் வழியாகவும் அவற்றின் மீதும் மின்சார மூலக் கம்பிகளையும் வடங்களையும் வடிகால் குழாய்களையும் அமைப்பதற்கும் நிறுவுவதற்குமான முழுமையானதும் கட்டுப்பாடற்றதுமான உரிமை, சுதந்திரம், அனுமதி உரிமம் அனைத்தும்.

1. மேற்படி கட்டுவஸ்கொட கிராமத்தில் அமைந்துள்ளதும் கொடபாரகஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து மேற்படி 1117 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் துண்டு 4 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (வீதிக்கென ஒதுக்கப்பட்டது). மேற்படி துண்டு 4 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : இதன் துண்டு 3 ; கிழக்கில் : இதன் துண்டு 2பீ ; தெற்கில் : இதன் துண்டு 1 பீ ; மேற்கில் : வீதி என்பன அமைந்துள்ளன. மேற்படி 1117 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு ஒரு பேர்ச் (0ஏ.0றூ.1பே.) அல்லது 0.0026 ஹெக்டேயர்.

2. மேற்படி கட்டுவஸ்கொட கிராமத்தில் அமைந்துள்ளதும் கொடபாரகஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து மேற்படி 1117 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் துண்டு 1 பீ என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (திருப்புச் சுற்றுவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது). மேற்படி துண்டு 1 பீ என்பதற்கு எல்லைகளாக வடக்கில் : இதன் துண்டு 4 மற்றும் 2 பீ ; கிழக்கில் : இதன் துண்டு 1 ஏ ; தெற்கில் : இதன் துண்டு 1ஏ ; மேற்கில் துண்டு 1ஏ என்பன அமைந்துள்ளன. மேற்படி 1117 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள குறிப்பின்படி இதன் பரப்பளவு ஒன்று தசம் ஆறுசைவர் பேர்ச்சஸ் (0ஏ.0றூ.1.60பே.) அல்லது 0.0041 ஹெக்டேயர்.

3. மேற்படி கட்டுவஸ்கொட கிராமத்தில் அமைந்துள்ளதும் கொடபாரகஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து மேற்படி 1117 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் துண்டு 2பீ என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (திருப்புச் சுற்றுவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது). மேற்படி துண்டு 2பீ என்பதற்கு எல்லைகளாக வடக்கில் : இதன் துண்டு 2ஏ ; கிழக்கில் : இதன் துண்டு 2ஏ ; தெற்கில் இதன் துண்டு 1பீ ; மேற்கில் : இதன் துண்டு 4 என்பன அமைந்துள்ளன. மேற்படி 1117 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள குறிப்பின்படி இதன் பரப்பளவு தசம் இரண்டு சைவர் பேர்ச்சஸ் (0ஏ.0றூ.0.20பே.) அல்லது 0.0005 ஹெக்டேயர்.

மேற்படி துண்டுகள் 4, 1பீ, 2பீ என்பன பின்வரும் காணியின் உட்பிரிவுகளாகும் :-

மேற்படி கட்டுவஸ்கொட கிராமத்தில் அமைந்துள்ளதும் கொடபாரகஹா என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் சீ. எச். பெர்னாண்டோ தயாரித்த 16.12.1926 ஆந் திகதிகொண்ட வரைபடத்தில் துண்டு ஏ என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு ஏ என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : சிந்துமாலியின் ஆதனம் ; கிழக்கில் : இதன் துண்டு பீ ; தெற்கில் புரான கும்புற மற்றும் மாரகஹாவத்த ; மேற்கில் ஹால்கஹாதெனிய என்பன அமைந்துள்ளன. மேற்படி 16.12.1926 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு மூன்று றூட் மூன்று தசம் இரண்டு ஏழு பேர்ச்சஸ் (0ஏ.3றூ.3.27பே.). இது கம்பஹா மாவட்டக் காணிப் பதிவகத்தில் பக்கம்/தொகுதி 224/83 இல் பதிவுசெய்யப் பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

9- 791/2

---

### வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ யால் [பதிவு இல. PQ 118] நிறைவேற்றட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி பின்வரும் தீர்மானம் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ யின் [பதிவு இல. PQ 118] பணிப்பாளர் சபையால் 2008, மே 29 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"கடவத்தை, சூரியகம, பட்டஹேன வீதி, 148/2 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ரத்நாயக முதியான்சேலாகே திலகரத்ன (இதனகத்துப் பின்னர் ''ஈடுவைத்தவர்'' எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜெனிவீவ் பியூமினி ரணசிங்க அத்தாட்சிப்படுத்திய 2005, ஒற்றோபர் 25 ஆந் திகதிகொண்ட 353 ஆம் இலக்க ஈட்டுமுறி, கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு விஜேபால தீகொட கமகே அத்தாட்சிப்படுத்திய 2006, ஒற்றோபர் 10ஆம் திகதிகொண்ட 5051 ஆம் இலக்க ஈட்டு முறி

என்பனமீது (இதனகத்துப் பின்னர் ''முறிகள்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மேற்கூறப்பட்ட ஈடுவைத்தவரால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 2, யூனியன் பிளேஸ், 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த (முன்னர் கொழும்பு 1, யோர்க் வீதி, 76 ஆம் இலக்கம்) (முன்னர் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி என அறியப்பட்ட) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீயின் (இதனகத்துப்பின்னர் ''வங்கி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) சார்பில் ஈடும் அடைமானமும் வைத்துள்ளார் ஆதலாலும்

மேற்கூறப்பட்ட ஈடுவைத்தவர் மேற்படி முறிகளின்பேரில் பெறப்பட்ட கடன் வசதிகளின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது 2008.05.20 ஆந் திகதியன்றுள்ளவாறு மேற்படி முறிகளின்மீது பதினைந்து இலட்சத்து இருபதாயிரத்து எழுநூற்றி எண்பத்தொரு ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூபா 15,20,781.52) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது ஆதலாலும்

பதினைந்து இலட்சத்து இருபதாயிரத்து எழுநூற்றி எண்பத்தொரு ரூபா ஐம்பத்திரண்டு சதத்தையும் (ரூபா 15,20,781.52) 2007.05.20 ஆந் திகதியன்றுள்ளவாறு முதலாவது வீடமைப்புக் கடன்மீது நிலுவையிலிருக்கும் முதல் நாலு இலட்சத்து எண்பதாயிரத்து ஐம்பத்தொரு ரூபா முப்பத்தைந்து சதத்தின்மீது (ரூபா 4,80,051.35) 2008.05.21 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 27.00% சதவீதப்படி மேலும் வட்டியையும் இரண்டாவது வீடமைப்புக் கடன்மீது நிலுவையிலிருக்கும் முதல் ரூபா ஒன்பது இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து ஐந்நூற்றி எழுபத்தொன்பது ரூபா எண்பத்தாறு சதத்தின்மீது (ரூபா 948,579.86) ஆண்டொன்றுக்கு 19.80% சதவீதப்படி மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச்சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் ட்ரையட் ஆக்ஷனியார்ஸால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப் படுகின்றது.''

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, அதிகாரி பற்று, மஹர பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட சூரிபளுவ கிராமத்தில் மஹாவத்த கி. ச. வீதியில் அமைந்துள்ளதும் கொங்கஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். சமரவிக்ரம தயாரித்த 1986, ஓகத்து 31 ஆந் திகதிகொண்ட 91/1986 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 2 என்பதற்கு எல்லைகளாக- வடக்கில் : துண்டு 1 ; கிழக்கில் : மஹாவத்த கி. ச. வீதி ; தெற்கில் : டொன் பந்துல சூரியாராச்சிக்குரிய இதே காணியின் எஞ்சிய பகுதி ; மேற்கில் : டொன் பந்துல சூரியாராச்சிக்குரிய இதே காணியின் எஞ்சிய பகுதி என்பன அமைந்துள்ளன. மேற்படி 91/1986 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பத்து பேர்ச்சஸ் (0ஏ.0றூ.10பே.).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

9- 791/3

---

## வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ யால் [பதிவு இல. PQ 118] நிறைவேற்றட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி பின்வரும் தீர்மானம் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ யின் [பதிவு இல. PQ 118] பணிப்பாளர் சபையால் 2008, மே 29 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

'' பன்னிப்பிட்டி, ருக்மலே வீதி. 793/3 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த உயன ஹேவகே டட்லி நிஷாந்த சில்வா அல்லது உயன ஹேவகே டட்லி நிஷந்த டீ சில்வா (இதனகத்துப்பின்னர் ''ஈடுவைத்தவர்'' எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டிலானி சஞ்சீவிகா சூரியாராச்சி அத்தாட்சிப்படுத்திய 2005, செத்தெம்பர் 19 ஆந் திகதிகொண்ட 769 ஆம் இலக்க ஈட்டு முறியின்மீது (இதனகத்துப் பின்னர் ''முறி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மேற்கூறப்பட்ட ஈடுவைத்தவரால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 2, யூனியன் பிளேஸ், 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த (முன்னர் கொழும்பு 1, யோர்க் வீதி, 76 ஆம் இலக்கம்) (முன்னர் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி என அறியப்பட்ட) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீயின் (இதனகத்துப்பின்னர் ''வங்கி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) சார்பில் ஈடும் அடைமானமும் வைத்துள்ளார் ஆதலாலும்

மேற்கூறப்பட்ட ஈடுவைத்தவர் மேற்படி முறியின்பேரில் பெறப்பட்ட கடன் வசதிகளின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது 2008.05.20 ஆந் திகதியன்றுள்ளவாறு மேற்படி முறிகளின்மீது பத்து இலட்சத்து அறுபத்து மூவாயிரத்து எழுபத்தெட்டு ரூபா பதினாறு சதம் (ரூபா 10,63,078.16) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது ஆதலாலும்,

பத்து இலட்சத்து அறுபத்து மூவாயிரத்து எழுபத்தெட்டு ரூபா பதினாறு சதத்தையும் (ரூபா 10,63,078.16) 2007.05.20 ஆந் திகதியன்றுள்ளவாறு முதலாவது வீடமைப்புக் கடன்மீது நிலுவையிலிருக்கும் முதல் ஒன்பது இலட்சத்து எண்பத்தையாயிரம் ரூபா ஐம்பத்தொன்பது சதத்தின்மீது (ரூபா 9,85,000.59) 21.05.2008 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 27.00% சதவீதப்படி மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச்சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் திரிவங்க அன்ட் சேனநாயக ஆக்ஷனியார் ஸால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோவாகம் கோறளை, பல்லேபற்று ஹோமாகம பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட பிட்டிபன கிராமத்தில் அமைந்துள்ளதும் வேயத்தாவலந்த என அழைக்கப்படுவது மான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. ஏ. தர்மசிறி தயாரித்த 1999, ஒற்றோபர் 03 ஆந் திகதி கொண்ட 1432 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2G என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 2G என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : துண்டு 2B ; கிழக்கில் : துண்டு 2 C ; தெற்கில் : துண்டு F (அகழி) ; மேற்கில் : துண்டு 2H என்பன அமைந்துள்ளன. மேற்படி 698 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பத்து பேர்ச்சஸ் (0ஏ.0றூ.10பே.). இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் தொகுதி /பக்கம் G 1507/134 என்பதில் பதிவுசெய்யப் பட்டுள்ளது.

கீழே நன்கு விவரிக்கப்படும் வீதிக்கென ஒதுக்கப்பட்ட காணியிலும் அதன்மீதும், அதன் வழியாகவும் வழியுரிமையையும் ஏனைய சார்புடைய உரிமைகளையும் சேர்த்து :-

பிட்டிபன கிராமத்தில் அமைந்துள்ளதும் வேயத்தாவலந்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. ஏ. தர்மசிறி தயாரித்த 1999, ஒற்றோபர் 03 ஆம் திகதிகொண்டு 1432 ஆம் இலக்க வரைபடத்தில் 2B என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (4.5மீ அகல வீதிக்கென ஒதுக்கப்பட்டது). மேற்படி துண்டு 2B என்பதற்கு எல்லைகளாக : வடக்கில் : துண்டு 2A ; கிழக்கில் : வீதி ; தெற்கில் : துண்டு 2E, 2D, 2G, 2H, 2I, 2K, 2J. 2L ; மேற்கில் : துண்டு 2L என்பன அமைந்துள்ளன. மேற்படி 1432 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு முப்பத்திரண்டு பேர்ச்சஸ். (0ஏ.0றூ.32பே.). இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் G 1507/ 135 என்பதில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

9- 791/4

**இலங்கை வங்கி**

**1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்**

02.04.2003 ஆந் திகதி நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளது :-

"1. பிரசித்த நொத்தாரிசு எல். எஸ். ஆத்தாவுத அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1999.08.09 ஆந் திகதிய 1286 கொண்ட முறியின் பேரில் "நதீ செவன", கும்புரகொட்டுவ, அலுவிஹாரை, மாத்தளை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. அலுத்கெதர பியசேன (B) போயகொட, திருமதி உடுவல வத்த ஸ்ரீயானி நவரத்ன என்பவர்களினால் முதலும் 23.12.1999 வரையிலான வட்டியுமான இரண்டு இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து ஐந்நூற்று எழுபத்தொன்பது ரூபா தொண்ணூற்றிரண்டு சதமும் (ரூபா 2,93,579.92) அத்துடன் இரண்டு இலட்சத்து அறுபத்தெண்ணா யிரத்து ஐந்நூற்று ஐம்பத்தாறு ரூபா முப்பத்தொன்பது சதத்திற்கு (ரூபா 2,68,556.39) 24.12.1999 ஆந் திகதி தொடக்கம் முழுப்பணமும் முற்றாகச் செலுத்தி முடிக்கும் வரை ஆண்டுக்கு இருபத்திமூன்று தசம் ஐந்து (23.5%) வீதத்திலான வட்டியும் இலங்கை வங்கிக்கு கூட்டாகவும் தனித்தனியாகவும் செலுத்த வேண்டியுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட 1999.08.09 ஆந் திகதிய இலக்கம் 1286 கொண்ட முறியின் மேல் வருமதியாகவுள்ள இரண்டு இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து ஐந்நூற்று எழுபத்தொன்பது ரூபா தொண்ணூற்றிரண்டு சதமும் (ரூபா 2,93,579.92) அத்துடன் 24.12.1999 ஆந் திகதி தொடக்கம் வீற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடக்கூடிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்துள்ள, இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக:கும் சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இலக்கம் 24, ரொறிங்டன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன்-சமரவிக்ரம அவர்களுக்கு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவிற்கும் அதன் திருத்தங் களுக்குமிணங்க இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப் படுகின்றது."

**அட்டவணை**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை தெற்கு, கம்பஹ சியபத்துவ, அலுவிஹாரையில் அமைந்துள்ள உத்தரவு பெற்ற நில அளவையாளர் W. D. தசநாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்ட 1998.10.17 ஆந் திகதிய 3816 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு ஏ எனக்காட்டப்பட்டுள்ள "டிக்கிரியவத்த" என்றழைக்கப்படும், வடக்கில்: உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. எஸ். சமரசிங்க அவர்களால் தயாரிக்கப்பட்ட 1977.08.23 ஆந் திகதிய 260கே இலக்கம் கொண்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணியும்; கிழக்கில் : தோட்டப் பாதையும் ; தென்-கிழக்கில் : உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. எஸ். சமரசிங்க அவர்களால் தயாரிக்கப்பட்ட 1977.08.23 ஆந் திகதிய இலக்கம் 260 எச் கொண்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணியும். மேற்கில்: உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் கே. எஸ். சமரசிங்க அவர்களால் தயாரிக்கப்பட்ட 1977.08.23 ஆந் திகதிய இலக்கம் 260சி கொண்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணியும் எல்லைகளாகக்

கொண்ட, இரண்டு றூட் (0ஏ.2றூ.0பே.) விஸ்தீரணமுடைய, பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள, காணி முழுவதும், அதற்குள் உள்ள பயிர்களும் மற்றும் அனைத்துமாகும். இது மாத்தளை காணிப்பதிவகத்தில் B 480/ 49 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

என். டபிள்யூ. விஜயவர்தன,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மாத்தளை.

9-811

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(தலைமை அலுவலகக் கிளை) - லசந்த தம்மிக்க ரன்ஜூமால் பீரிஸ் விஜேமான்ன

ஹட்டன் நாஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2008, யூலை 29 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

" லசந்த தம்மிக்க ரன்ஜூமால் பீரிஸ் விஜேமான்ன என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். பீ. எம். மோஹோட்டி என்பவரால் அத்தாட்சிப்படுத்திய 2003, மாச்சு 7 ஆம் திகதியிடப்பட்ட 1874 ஆம் இலக்க முறிமீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளமையினாலும், 2008, மாச்சு 31 ஆம் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிமீது ஐந்து இலட்சத்து அறுபத்தி ஆறாயிரத்து எழுநூற்று எழுபத்தி ஒன்பது ரூபா நாற்பத்தி ஐந்து சதம் (ரூ. 5,66,779.45) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதனாலும், ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 1874 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 5,66,779.45 பணத்தொகையை, 2008, ஏப்பிறல் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் ஆர். எஸ். மஹாநாம என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

#### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளை பள்ளே பற்றுவில் உள்ள கடுவெல பிரதேச சபையின் கடுவெல பிரிவில் உள்ள தலஹேனவில் உள்ள கொஸ்கஹாவத்த என அழைக்கப்படும் காணியின் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். டி. லியனசூரிய வினால் தயாரிக்கப்பட்ட 1984, திசெம்பர் 2 ஆம் திகதியிடப்பட்ட 3298 என்ற வரைபட இலக்கத்திற்கு அமைவான காணித்துண்டு 2பி4 இன் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 2பி1 ; கிழக்கு : காணித்துண்டுகள் 2பி2 மற்றும் 2பி8 ; தெற்கு : காணித்துண்டு 2பி5 ; மேற்கு : ஹல்பராவ வீதி, அத்துடன் கொழும்பு மாவட்ட காணிப்பதிவகத்தில் ஜீ 1198/239 இல் பதியப்பட்டதும், சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 3298 இன் பிரகாரம், ஆறு தசம் எட்டு ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 6.85பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

மேல் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அண்மையில், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஆர். சில்வாவினால் மீள அளவை செய்யப்பட்டு அவரினால் தயாரிக்கப்பட்ட 2003, பெப்புருவரி 28 ஆம் திகதியிடப்பட்ட 1425 ஆம் இலக்க வரைபடத்தில் பின்வருமாறு விபரிக்கப்படுகிறது :-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோறளை பள்ளே பற்றுவில் உள்ள கடுவெல பிரதேச சபையின் கடுவெல பிரிவில் உள்ள தலஹேனவில் உள்ள கொஸ்கஹாவத்த என அழைக்கப்படும் காணித்துண்டு 2பி4 பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதன் எல்லைகள் - வடக்கு : வரைபட இலக்கம் 3298 இல் உள்ள காணித்துண்டு 2பி1 ; கிழக்கு : வரைபட இல்ககம் 3298 இல் உள்ள காணித்துண்டுகள் 2பி2 மற்றும் 2பி8 ; தெற்கு : வரைபட இலக்கம் 3298 இற்கு அமைய உள்ள காணித்துண்டு 2பி5 ; மேற்கு : ஹல்பராவ வீதி, (திசற மாவத்தை) மற்றும் வரைபட இலக்கம் 1425 இற்கு அமைய ஆறு தசம் ஏழு ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 6.75பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

9 - 817/1

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(கொட்டாஞ்சேனை கிளை) - நாகலிங்கம் சுப்பிரமணியம்

ஹட்டன் நாஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2008, யூலை 29 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

" நாகலிங்கம் சுப்பிரமணியம் என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். டீ. என். சமரநாயக்கா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, பெப்புருவரி 16 ஆம் திகதியிடப்பட்ட 1502 ஆம் இலக்க முறிமீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2008, மே 5 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்திற்கு

சொல்லப்பட்ட முறிமீது பத்து இலட்சத்து தொண்ணூற்று நாலாயிரத்து அறுநூற்றி இருபத்தி ஒன்பது ரூபா அறுபத்தி ஒரு சதம் (ரூ. 10,94,629.61) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப் பட்டனவும், சொல்லப்பட்ட 1502 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவும் சொல்லப்பட்ட ரூ. 10,94,629.61 பணத் தொகையை, 2008, மே 6 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனை யாளர் ஆர். எஸ். மஹாநாம என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக் கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் (கொழும்பு பதிவப் பிரதேசத்திற்கு உட்பட்டது) சியனே கோறளையின் அதிகாரி பற்றுவில் களனி பிரதேச சபையின் தலுகம உப அலுவலக எல்லைக்குள் ஹுனுப்பிட்டிய கிராமத்தின் காந்தி மாவத்தையில் அமைந்துள்ளதும் (உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. ரூபசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001, நவெம்பர் 1 ஆம் திகதிய 873/2001 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டுகள் ஏ1, ஏ2 மற்றும் ஏ3 என்பவற்றின் ஒன்றிணைப்பின் உப பிரிவொன்றாக இருப்பதும்) கஹாட்டகஹவத்த என அழைக்கப்படும் காணியுடன் மரங்கள், தோட்டங்கள் எல்லாமும் சேர்த்து அதன் எல்லைகளாக - வடக்கு : காணித்துண்டுகள் 1 மற்றும் 2 உம் ; கிழக்கு : காணித்துண்டு 10 (4.57 மீட்டர் அகல வீதிக்கான ஒதுக்கீடு) மற்றும் காணித்துண்டு 11 (திருப்பு வட்டம்) ; தெற்கு : காணித்துண்டு 11 (திருப்பு வட்டம்) மற்றும் காணித்துண்டு 8 ; மேற்கு : காந்தி மாவத்தை, 52/55 வரிமதிப் பிலக்கத்தைக் கொண்ட ஆதனம், அத்துடன் கொழும்பு காணிப் பதிவகத்தில் சீ 636/278 இல் பதிவு செய்யப்பட்டதும், சொல்லப்பட்ட 1918 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் ஏழு தசம் ஆறு பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 7.6பே.) அல்லது 0.0193 ஹெக்டேயர் விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

இத்துடன் அடகு முறி இலக்கம் 1502 இன் இரண்டாவது அட்டவணையில் விபரிக்கப்பட்டதற்கு அமைவாக காணித்துண்டுகள் 10 மற்றும் 11 இன் மேலான பாதை உரித்தும் வழங்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

9 - 817/2

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(பாணந்துறை கிளை) - ரன்கொத் பெடிகே வசந்த ராஜகருணா

ஹட்டன் நாஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2008, யூலை 29 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"ரன்கொத் பெடிகே வசந்த ராஜகருணா என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பில் பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. பி. எஸ். பொன்சேகா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000, செத்தெம்பர் 5 ஆம் திகதியிடப்பட்ட 3365 ஆம் இலக்க முறி மற்றும் பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு பீ. வி. என். டபிள்யூ. பெரேரா என்பவரால் அத்தாட் சிப்படுத்தப்பட்ட 2007, மாச்சு 13 ஆம் திகதியிடப்பட்ட 1895 ஆம் இலக்க முறிகள் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2008, மே 31 ஆம் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள்மீது பதினெழு இலட்சத்து ஐம்பத்தி இரண்டாயிரத்து எழுநூற்றி இரபத்தி மூன்று ரூபா தொண்நூற்றி நாலு சதம் (ரூ. 17,52,723.94) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும் அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக் கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 1895 மற்றும் 3365 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 17,52,723.94 பணத்தொகையை, 2008, யூன் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் ஆர். எஸ். மஹாநாம என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் பாணந்துறை, தோட்டமுனே, களுத்துறை பிரதேச சபைக்கு உட்பட்ட வாது வஸ்கடு, தேபெத்தவில் உள்ள மொறந்துடுவ உப காரியாலய எல்லைகளுக்கு உட்பட்ட மெலிகம பெருந்தோட்டம் என அழைக்கப்படும் காணி அத்துடன் கட்டடங்கள் மற்றும் எல்லாம் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டீ. ஏ. விஜேசூரிய என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997, பெப்புருவரி 11 ஆம் திகதிய 817 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுமான காணித்துண்டு 171பி என அடையாளம் இடப்பட்டதுமான, அப்பிரிக்கப் பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் மற்றும் எல்லாவற்றுடனும், சேர்த்து சொல்லப்பட்ட காணித்துண்டு 171பி இன் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டுகள் 171சீ (வீதி) மற்றும் 171ஏ ; கிழக்கு : அதே காணியில் உள்ள காணித்துண்டு 170 ; தெற்கு : ஜீ. எஸ். பர்ணாந்து மற்றும் எஸ். எம். ஏ. வில்லியம் ஆகியோரினால் உரிமை கோரப்படும் காணி ; மேற்கு : அதே காணித்துண்டு 172 அத்துடன் பாணந்துறை காணிப்பதிவகத்தில் ஜீ. 137/104 இல் பதிவு

செய்யப்பட்டதும், சொல்லப்பட்ட 817 வரைபடத்தின் பிரகாரம் பத்து தசம் ஒன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10.1பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

அத்துடன் இரண்டாவது அட்டவணையில், விபரித்துள்ளதற்கு அமைய பாணந்துறை பிரசித்த நொத்தாரிசுகளான பீ. வி. என். டபிள்யூ. பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, மாச்சு 13 ஆம் திகதியிடப்பட்ட முறி இலக்கம் 1895 மற்றும் டபிள்யு. பி. எஸ். பொன்சேகாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000, செத்தெம்பர் 5 ஆம் திகதியிடப்பட்ட 3365 ஆம் இலக்க முறிகளுக்கு அமைவாக பாதையுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

9 - 817/3

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ - தெகிவளைக் கிளை

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்ட)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(தெகிவளை கிளை) - எம். ஜே. அன்ட் எம். எல். என்ஜினியரிங் கொன்ஸ்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்

ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2008, யூலை 29 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

" எம். ஜே. அன்ட் எம். எல். என்ஜினியரிங் கொன்ஸ்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடுடையதாக பின்வரும் கொடுப்பனவுகளில் தவறியுள்ளது. கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். சி. ஜயவர்தன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட (ஆதனம் தொடர்பான மேலதிக விபரிங்கள் முதலாவது அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது) 2006, யூலை 18 ஆம் திகதியிடப்பட்ட முறி இலக்கம் 2740 இன் கீழ் ஒரு கோடியே இருபத்தி நாலு இலட்சத்து அறுபத்தி ஏழாயிரத்து முன்நூற்று ஐம்பத்து ஐந்து ரூபா பதினேழு சதம் (ரூ. 1,24,67,355.17) செலுத்த வேண்டியுள்ளது.

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். சி. ஜயவர்தன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, யூலை 4 ஆம் திகதியிடப்பட்ட முறி இலக்கம் 2943 இன் கீழ் இரண்டு கோடியே முப்பது இலட்சத்து எண்பத்தோராயிரத்து எண்ணூற்று எழுபத்து நாலு ரூபா இருபத்து இரண்டு சதம் (ரூ. 2,30,81,874.22) செலுத்த வேண்டியுள்ளதுடன், ஆதனம் தொடர்பான மேலதிக விபரங்கள் இரண்டாவது அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். சி. ஜயவர்தன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, யூலை 18 ஆம் திகதியிடப்பட்ட 2740 ஆம் இலக்க முறி (ஆதனம் தொடர்பான மேலதிக விபரங்கள் முதலாவது அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது) மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு யூ. எஸ். கே. ஹேரத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, நவெம்பர் 30 ஆம் திகதியிடப்பட்ட 3021 ஆம் இலக்க முறி (ஆதனம் தொடர்பான மேலதிக விபரிங்கள் இரண்டாவது அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது) என்பவற்றின் கீழ் 2008, மாச்சு 31 வரை அறுபத்து ஏழு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து நானூற்றி ஐம்பத்தி ஒரு ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 67,29,451.21) விபரிக்கப்பட்டுள்ளபடி மொத்த தொகையான ரூபா 4,22,78,680.60 கொடுப்பனவுகளுக்கான தவணை தவறப்பட்டள்ளது ஆதலாலும் 2008, மாச்சு 31 ஆம் திகதி குறிப்பிட்ட மொத்த பணத்தொகை தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட முறி இலக்கங்களான 2740, 2943 மற்றும் 3021 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவு மான ஆதனமும் வளவும் சொல்லப்பட்ட ரூ. 4,22,78,680.60 பணத்தொகையை, 2008, ஏப்பிறல் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் ஆர். எஸ். மஹாநாம என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

#### முதலாம் அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு முதலியார் பிரிவு, சல்பிற்றி கோறளை வாட்டு 11 (நெதிமால் மற்றும் நிக்கப்பே) இல் உள்ள தெகிவளை - கல்கிசை மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள நிக்கப்பேயின் நிக்கப்பே வீதியின் 39/12ஏ வரிமதிப்பிலக்கத்தைக் கொண்டுள்ள புலுகஹாவத்த மற்றும் கொங்கஹவத்த என்ற காணியுடனான கட்டடங்கள் மற்றும் எல்லாம் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கே. ஜீ. கிருஷ்ணபிள்ளையினால் தயாரிக்கப்பட்ட 2005, பெப்புருவரி 7 ஆம் திகதியிடப்பட்ட 1292 ஆம் இலக்க வரை படத்திற்கு அமைவான ஆதனம், பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதில் உள்ள எல்லாமும் சேர்த்து அதன் எல்லைகளாக- வடக்கு : நிக்கப்பே வீதியில் உள்ள 43/1 வரிமதிப்பிலக்கம் கொண்ட காணி மற்றும் வீதி ; கிழக்கு : ரபர்வத்த வீதி ; தெற்கு : நிக்கப்பே வீதியில் உள்ள 39/11ஏ மற்றும் 39/12 ஆகிய வரிமதிப்பிலக்கங்களைக் கொண்டுள்ள காணிகள் ; மேற்கு : எல, அத்துடன் கல்கிசை மாவட்டக் காணிப்பதிவகத்தில் எம். 2950/205இல் பதிவுசெய்யப்பட்டதும், சொல்லப்பட்ட 1292 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் முப்பத்தி ஐந்து தசம் ஒன்பது ஆறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 35.96பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

#### இரண்டாம் அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், கல்பிற்றி கோறள பள்ளே பற்று, கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட திம்பிரிகஸ்யாய பிரதேசத்தில் உள்ள எயின்ரீ வீதியின் வரிமதிப்பிலக்கம் 7 இல் அமைந்துள்ள காணியின் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டீ. டீ. சி. ஹீன்தெனியவினால் தயாரிக்கப்பட்ட 2006, சனவரி 8 ஆம் திகதியிடப்பட்ட 2767 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவான காணித்துண்டு 1 இன் எல்லைகள் - வடக்கு : எப்சன் வீதியின் 3 ஆம் வரிமதிப்பு இலக்கம் மற்றும் அஸ்கொட் அவன்யூ வரிமதிப்பிலக்கம் 3 ; கிழக்கு : அஸ்கொட் அவன்யூவின் வரிமதிப்பிலக்கம் 3, மற்றும் திம்பிரிகஸ்யாய வீதியின் 227 மற்றும் 231 வரிமதிப்பு இலக்க ஆதனங்கள் ;

தெற்கு : திம்பிரிகஸ்யாய வீதியில் உள்ள வரிமதிப்பிலக்கங்கள் 227 மற்றும் 231 ஆதனங்கள் ; மேற்கு : எயின்ரீ வீதி மற்றும் எப்சன் வீதயில் உள்ள வரிமதிப்பிலக்கம் 3, கொண்ட ஆதனம், கொழும்பு மாவட்டக் காணிப்பதிவகத்தில் ஏ 1109/187 இல் பதியப்பட்டதும், சொலல்ப்பட்ட வரைபட இலக்கம் 2767 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம், பதினெட்டு தசம் நான்கு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 18.40பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

9 - 817/4

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ - பஞ்சிகாவத்தை கிளை

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்ட)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(பஞ்சிகாவத்தை கிளை) - டெஸ்மன் அப்பவோ அலன் டெக்ஸ்டர் பர்ணாந்து

ஹட்டன் நாஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2008, யூலை 29 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

" டெஸ்மன் அப்பவோ அலன் டெக்ஸ்டர் பர்ணாந்து என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பில் பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு ஜீ. என். விக்கிரம என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, செத்தெம்பர் 19 ஆம் திகதியிடப்பட்ட 167 இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2008, ஏப்பிறல் 30 ஆம் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிமீது முப்பத்து எட்டு இலட்சத்து முப்பத்து ஓராயிரத்து முன்நூற்று எழுபத்தியாறு ரூபா இருபத்தி எட்டு சதம் (ரூ. 38,31,376.28) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 167 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவு மான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 38,31,376.28 பணத்தொகையை, 2008, மே 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் சல்பிற்றி கோறளையின், ஹாரிஸ்பற்றுவ, குலுகம்மான சியபற்றுவவில் உள்ள யட்டிஹலகல-பள்ளேகம எனும் இடத்தில் அமைந்துள்ளதும், கம்பரபிட்டியேகெதர வத்த (கம்பரப்பிட்டியேகெதர வத்த என அழைக்கப்படும் காணியின் காணித்துண்டுகள் 1-3 என அடையாளமிடப்பட்டுள்ள மூன்று காணித் தெகுதிகளின் பிரிக்கப்படாதவையாகும்) கம்பரபிட்டிய கெதர வத்த இருந்து உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. எச். தென்னக்கோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006, பெப்புருவரி 22 ஆம் திகதிய 1322ஏ இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுமான காணித்துண்டு 2 என அடையாளம் இடப்பட்டதுமான, அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் மற்றும் எல்லாவற்றுட னும், சேர்த்து. சொல்லப்பட்ட காணித்துண்டு 2 இன் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 1 மற்றும் பிரதேச சபை வீதி ; கிழக்கு : டபிள்யு. ஜீ. நிமாலினாலும், மற்றவர்களினாலும் உரிமை கோரப்பட்ட காணி ; தெற்கு : ஜீ. ஜீ. ஜயரத்தினவினாலும், மற்றவர்களினாலும் உரிமை கோரப் படும் வயல் நிலம் (தற்சமயம் தோட்டம்) மற்றும் காணித்துண்டு 1 ; மேற்கு : காணித்துண்டு 1 மற்றும் காணித்துண்டு 3( 10 முதல் 12 அடி அகலமான வீதிக்கான ஒதுக்குகை) அத்துடன் கண்டி காணிப் பதிவகத்தில் எச். 781/125 இல் பதிவு செய்யப்பட்டதும், சொல்லப்பட்ட 1322ஏ வரைபடத்தின் பிரகாரம் ஒரு றூட், முப்பத்தி இரண்டு தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 32.5பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

அத்துடன் 1322ஏ ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 3 இன் வீதிக்கான ஒதுக்குகையின் மீதும் அதன் வழியாகவும் உள்ள பாதையுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

9 - 817/5

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ - கல்கிசை கிளை

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்ட)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(கல்கிசை கிளை) - பதிரண்ணஹெலகே சாந்த கருணாரட்ன

ஹட்டன் நாஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2008, யூலை 29 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"பதிரண்ணஹெலகே சாந்த கருணாரட்ன என்பவர் கடப்பாடு டையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பில் மொரட்டுவ பிரசித்த நொத்தாரிசு நாஓமல் ஜே. பர்னாண்டோ ஜீ. என். விக்கிரமவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, நவெம்பர் 17 ஆந்

*திகதியிடப்பட்ட 6126 இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2008, பெப்புருவரி 29 ஆம் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிமீது பதினொரு இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து முன்நூற்றி நாற்பத்து ஏழு ரூபா முப்பத்து ஏழு சதம் (ரூ. 11,86,347.37) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 6126 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 11,86,347.37 பணத்தொகையை, 2008, மாச்சு 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் ஆர். எஸ். மஹாநாம என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''*

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிற்றி கோறளையின் பள்ளேபற்றுவில் உள்ள தெகிவளை-கல்கிசை மாநகர சபைக்கு உட்பட்ட அத்திடிய வடக்கின், அத்திடிய பகுதி இலக்கம் 21 இல், தெல்கஹாஹேன என அழைக்கப்படும் காணியில் இருந்து உரிமம்பெற்ற நிலஅளவையாளர் காமினி பி. தொடன்வலயினால் தயாரிக்கப்பட்ட 2002, நவெம்பர் 15 ஆம் திகதிய 4119 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 2 என அடையாளம் இடப்பட்டதுமான, அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் மற்றும் எல்லாவற்றுடனும், சேர்த்து சொல்லப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : 15 அடி அகலமான வீதி ; கிழக்கு : பன்சல வீதி ; தெற்கு : காணித்துண்டு 5 (வீதிக்கும் வடிகாலுக்கும் என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது) ; மேற்கு : காணித்துண்டு 1, அத்துடன் கல்கிசை காணிப்பதிவகத்தில் எம். 2687/208 இல் பதிவு செய்யப்பட்டதும், சொல்லப்பட்ட 4119 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பத்து பேர்ச்சுகள் (0ஏ. 0று. 10பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

அத்துடன் மொறட்டுவ பிரசித்த நொத்தாரிசு நாஓமல் ஜே. பர்ணான்டோவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, நவெம்பர் 17 ஆம் திகதியிடப்பட்ட 6126 ஆம் இலக்க முறியில் விபரிக்கப்பட்டதற்கு அமைய பாதையுரிமை போன்றவையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

9 - 817/6

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ - மருதானை கிளை

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்ட)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(மருதானை கிளை) - மொகமட் கலீல் மொகமட் ரம்சி

ஹட்டன் நாஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2008, யூலை 29 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

*'' மொகமட் கலீல் மொகமட் ரம்சி என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு யூ. எஸ். கே. ஹேரத் என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2004, மே 26 ஆம் திகதியிடப்பட்ட 1620 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2008, யூன் 5 ஆம் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிமீது ஐந்து இலட்சத்து பதினாறாயிரத்து ஐந்நூற்று நாற்பத்து எட்டு ரூபா எண்பது சதம் (ரூ. 5,16,548.80) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 1620 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவும் சொல்லப்பட்ட ரூ. 5,16,548.80 பணத்தொகையை, 2008, யூன் 6 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் ஆர். எஸ். மஹாநாம என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''*

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், சியனே கோறளையில் உள்ள அதிகாரிப்பற்று, பியகம பிரதேச சபையின் மாகேகோல உப அலுவலக எல்லைக்குட்பட்ட ஹெய்யன்துடுவ கிராமத்தில் உள்ள நாகஹலந்த என அழைக்கப்படும் காணியில் இருந்து உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எல். என். பர்ணான்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001, செத்தெம்பர் 12 ஆம் திகதியிட்பட்ட 1000 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும், காணித்துண்டு ஏ என அடையாளமிடப்பட்டதுமான, குணசேகர வீதியில் வரிமதிப்பிலக்கம் 26/1 என அடையாளமிடப்பட்ட, பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும், அதில் உள்ள எல்லாமும் சேர்த்து அத்துடன் சொல்லப்பட்ட காணித்துண்டு ஏ இன் எல்லைகள் - வடக்கு : குணசேகர மாவத்தை ; கிழக்கு : அதே காணியின் மிகுதியான பகுதி ; தெற்கு : வண்டிகளுக்கான வீதியும் அத்துடன் மேற்கு : வண்டிகளுக்கான வீதியும், கம்பஹா மாவட்ட காணிப்பதிவகத்தில் பிரிவு - பக்கம் சீ 691/62 இல்

பதிவு செய்யப்பட்டதும், சொல்லப்பட்ட 1000 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பதினைந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

9 - 817/7

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

கடன் இலக்கம் : 0200003453
கடனாளியின் முழுப்பெயர் : மதுரப்பெரும ஆரச்சிகே சியாமல் சாலித மதுரப்பெரும

"கம்பஹாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டி. டப்ளியு. விஜேசிங்ஹ என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 654 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2006.08.08 ஆந் திகதி இடப்பட்ட அடமானப் பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால் மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் கீழ் நான்கு இலட்சத்து முப்பத்தாறாயிரத்து முந்நூற்று பத்து ரூபா எழுபத்து இரண்டு சதம் (ரூபா 4,36,310.72) 2007.10.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்–

1. குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான நான்கு இலட்சம் ரூபாவையும் (ரூபா 4,00,000) 2007.10.31ஆந் திகதி வரையிலான வட்டியாக முப்பத்தாறாயிரத்து முந்நூற்று பத்து ரூபா எழுபத்தி இரண்டு சதத்தினையயும் (ரூ. 36,310.72) மொத்தமாக நான்கு இலட்சத்து முப்பத்தாறாயிரத்து முந்நூற்று பத்து ரூபா எழுபத்து இரண்டு சதத்தினை (ரூபா 4,36,310.72) அறவீடு செய்யவும்;

2. குறிப்பிட்ட நான்கு இலட்சம் ரூபாவையும் (ரூபா 4,00,000) அறவீடு செய்ய வேண்டிய 14.90% மான வருடாந்த வட்டியினை 2007.11.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும்;

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யவேண்டிய பணம் மற்றும் கட்டணங்களை

அறவீடு செய்துகொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு) மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்துக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டப்ளியு. எம். விக்கிரமரத்ன என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது."

### அட்டவணை

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், சியனே கோறளை கங்கபடபத்துவவில் தொம்பே பிரதேச சபை எல்லையில் பெலஹெர கிராமத்தில் அமைந்துள்ள தெல்கஹவத்த என்ற காணிக்கு 2001.01.07 ஆந் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் கே. நந்தசேன என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2422 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 3 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக – வடக்கே : பிரவேசப் பாதையும் 1 ஆம், 2 ஆம் இலக்கக் காணித் துண்டுகளும் ; கிழக்கே : வீரரத்ன மற்றும் ஏனையவர்களுக்குச் சொந்தமான காணித்துண்டும் ; தெற்கே : பாதையும் (அபிவிருத்தி சபை) ; மேற்கே : பாதையும் (அபிவிருத்தி சபை) அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு இரண்டு றூட்களாகும் (0ஏ.2றூ.0பே.) இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடம், மரங்கள் மற்றும் அனைத்துடன் பாதைக்கான உரிமையும் கம்பஹா காணிப்பதிவு அலுவலகத்தில் D 364/132 என்ற தலைப்பின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

9-826

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

கடன்பெறுநரின் பெயர் : ஷிரான் டிரேடிங் கம்பனி (பிரை.) லிமிட்டெட்
பணிப்பாளர்களின் பெயர் : திரு. வன்னி ஆரச்சிகே வின்சன்ற் பொன்சேகா மற்றும் திரு. நிசான் சிறிவர்த்தன–இல. 33/1, ராணிமடம, என்டேரமுல்ல, வத்தளை.

2008.07.24 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்த தாவது வீ

,1. பிரசித்த நொத்தாரிசு எஸ். எச். ரணவக்க அத்தாட்சிப் படுத்திய 2002.05.03 ஆந் திகதியிட்ட முறி இல. 1686 மற்றும் 2000.12.14 ஆந் திகதியிட்ட முறி இல. 1576 ஆகியவற்றின் பேரில் இல. 33/1, ராணிமடம, எடேரமுல்ல, வத்தளை என்னும் முகவரியைச் சேர்ந்த ஷிரான் டிரேடிங் கம்பனி (பிரை) லிமிட்டெட்டிடம் இருந்து 2008.06.02 ஆந் திகதிவரை மேலதிகப்பற்று மீது முதலும் வட்டியும் நாற்பத்தாறு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து தொளாயிரத் தெழுபத்தைந்து ரூபா நாற்பத்தொரு சதமும் (ரூ. 46,12,975.41) அத்துடன் பதினாறு இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து நாநூற்று தொண்ணூற்றாறு ரூபா பதின்மூன்று சதத்தில் (ரூ. 16,47,496.13) ஆண்டுக்கு 20 வீதத்தில் 2008.06.03 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்.

2. மேற்குறிப்பிட்ட முறி இலக்கங்கள் 1576 மற்றும் 1686 ஆகியவற்றின் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட நாற்பத்தாறு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து தொளாயிரத்தெழுபத்தைந்து ரூபா நாற்பத்தொரு சதம் (ரூ. 46,12,975.41) அத்துடன் 2008.06.03 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 05 என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரமவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும், இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி தலைநகரக் கிளை அறவிடல்களும் கடன் கண்காணிப்பும் பகுதி முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப் படுகின்றது.,

### விற்பனைக்குரிய ஆதனம்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மஹர கிராமசபை எல்லைகளுள் சியனே கோரளை மேற்கு, அதிகாரிபற்றுவில் பின்னமெட கிராமத்தில் அமைந்த வத்தளை, எடேரமுல்லயில் பதிலியதுடுவ றோட், வரிமதிப்பிலக்கம் 17 ஐக் கொண்டதும் ராணிமடம என அழைக்கப்படும் காணி அளவையாளர் நாயகம் தயாரித்த 1962, ஓகத்து 11 ஆந் திகதியிட்ட ஆரம்ப வரைபடம் இல. ஏ 4659 இல் விபரித்த துண்டு 47 என அடையாளமிட்ட காணித்துண்டுகள்- வடகிழக்கில் : அதே காணியின் துண்டு 48 உம் ; தென்கிழக்கில் : ஏ. பீ. பிகேரா உரிமைகோரும் ராணிமடம எஸ்டேட்டும் (ரப்பர்) ; தென்மேற்கில் : றோட்டும் அதே காணியின் துண்டு 45 உம் ; வடமேற்கில் : அதே காணியின் துண்டு 43 உம் எல்லைகளாகக் கொண்டு இருபது தசம் ஏழு எட்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20.78பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடம், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். மேற்குறிப்பிட்ட ஆரம்ப வரைபடம் இல. ஏ 4659 இற்கமைய மேற்குறிப்பிட்ட ஆரம்ப வரைபடம் இல. 4659 இல் விபரித்த பாதை ஒதுக்கங்களை உபயோகிப்பதற்கும் வழி மீதான உரிமையும் ஆகும். இது கம்பஹா காணிப்பதிவகத்தில் சி557/137 இல் பதிவுசெய்யப்பட்டது.

துண்டு 47 என அடையாளமிடப்பட்ட மேற்குறிப்பிட்ட காணித்துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஏ. கட்டுகம்பொல தயாரித்த 1992, ஏப்பிறல் 9 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 17/1992 இன்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது :

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை மேற்கு, அதிகாரிபற்றுவில் பின்னமெட கிராமத்தில் அமைந்ததும் பதிலியதுடுவ றோட் (நாதுடுவ றோட்) வரிமதிப்பிலக்கம் 17 மற்றும் 17/1 ஐக் கொண்ட கட்டிடத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 17/1992 இல் விபரித்த துண்டு ஏ என அடையாளமிட்ட (மேற்குறிப்பிட்ட ஆரம்ப வரைபடம் இல. ஏ 4659 இல் விபரித்த மீளளவை செய்யப்பட்ட துண்டு 47) பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கில் : ஆரம்ப வரைபடம் இல. ஏ 4659 இல் துண்டுகள் 43, 49 மற்றும் 48 உம் ; கிழக்கில் : ஆரம்ப வரைபடம் இல. ஏ 4659 இல் ஏ. பீ. பிகேராவின் (தொலைபேசி : 59024) ராணிமடம எஸ்டேட்டும் ; தெற்கில் : ஏ. பீ. பிகேராவின் (தொலைபேசி : 59024) ராணிமடம எஸ்டேட் மற்றும் ஆரம்ப வரைபடம் இல. ஏ 4659 இல் துண்டுகள் 46 (பாதை) மற்றும் 45 உம் ; மேற்கில் : ஆரம்ப வரைபட இல. ஏ4659 இல் துண்டுகள் 46 (பாதை), 45 மற்றும் 43 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 17/1992 இன்படி இருபது தசம் ஏழு எட்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20.78பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது கம்பஹா காணிப்பதிவகத்தில் சி 557/228 இல் பதிவுசெய்யப்பட்டது.

(திருமதி) ஐ. எம். பண்டிதரத்ன,
முகாமையாளர்-அறவிடல்களும் கடன் கண்காணிப்பும்.

இலங்கை வங்கி,
தலைநகரக் கிளை,
அறவிடல்களும் கடன் கண்காணிப்பும் பகுதி,
யோர்க் வீதி,
கொழும்பு 01.

9-813

---

### றுஹுண அபிவிருத்தி வங்கி – எல்பிட்டிய கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் றுஹுணு அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்.

1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் கீழ் இலங்கை நிதிச் சபையினால் பிரசுரிக்கப்பட்ட 1998.04.24 ஆந் திகதியின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலுக்கிணங்க உருவாக்கப்பட்ட றுஹுண அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2004.11.04 ஆந் திகதி நடாத்தப்பட்ட றுஹுண அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை கூட்டத்திலே கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப் பட்டது :-

"றுஹுணு அபிவிருத்தி வங்கியின் சட்டத்தரணியும் பிரசித்திபெற்ற நொத்தாரிசுமான திரு. என். ஹேமபால த சில்வா அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2001.06.25 ஆந் திகதிய இலக்கம் 1073 எனும் ஈட்டுப் பத்திரத்தின் கீழ் அறவிடவேண்டிய பணம் செலுத்துதல் எல்பிட்டிய, பிரஜாகல்லெனயில் வசிக்கம் குலிகொட பத்தினிவிதானகே சுதத் பிரசன்னயும், எல்பிட்டிய டிப்போ மாவத்தையில் வசிக்கும் குலிகொட பத்தினி வித்தானகே சுகதபால என்பவர்களினால் செலுத்தாது விடப்பட்டதாகவும், அவ் ஈட்டுப்பத்திரத்தின் கீழ் இரண்டு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து தொளாயிரத்தைம்பத்தெட்டு ரூபா (ரூ. 2,19,958) க்கான பணம் றுஹுணு அபிவிருத்தி வங்கிக்குச் செலுத்த வேண்டியிருப்பதாகவும், 2003.02.01 ஆந் திகதியிலிருந்து வருடத்திற்கு 26% படி இரண்டு

இலட்சத்து பத்தொன்பதாயிரத்து தொளாயிரத்தைம்பத்தெட்டு ரூபா (ரூ. 2,19,958) க்கான பணம் ஏலவிற்பனை திகதியிலிருந்து வட்டியுடன் ஏலவிற்பனை செலவும், வேறு ஏதாவதொரு செலவுகள் செய்திருப்பின் அவற்றைக் குறைத்துக் கொண்டும், அவற்றை அறவிட்டுக்கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம்பெற்ற ஏல விற்பனையாளரான திரு. ஜி. பீ. ஆனந்த என்பவரினால் ஈட்டுப்பத்திர இலக்கம் 1073 இன்கீழ் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களும் ஏனையவற்றுடன் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கியின் பணிப்பாளர் சபை இதில் தீர்மானித்துள்ளது."

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்**

தென்மாகாணத்தில் காலி மாவட்டத்தின் பென்தொட வலல்லாவிட கோரலய எல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் எல்பிட்டிய தெற்கில் அமைந்துள்ள ஜீ. பீ. ஏ. 201 எனும் வரைபடத்தின் குறிப்பிட்டபடி எல்பிட்டிய கந்த என்ற காணியின் இல. 21 என்ற துண்டு- வடக்கே : மேற்குறிப்பிட்ட வரைபடத்தின் இல. 12 என்ற துண்டும் ; கிழக்கே : வரைபடத்தின் இல. 20 என்ற துண்டும் ; தெற்கே : மேற்குறிப்பிட்ட இல. 11 என்ற துண்டும் 29 என்ற துண்டும் ; மேற்கே : மேற்குறிப்பிட்ட வரைபடத்தின் இல. 11 என்ற துண்டும் எல்லையாகக் கொண்ட மூன்று றூட் எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 3றூ. 8பே.) கொண்ட மிகப்பெரிய காணியின் முழு நிலப்பரப்புக்கான நிலம், அங்குள்ள பயிர்ச்செய்கை, மரங்கள், கட்டிடங்கள் அனைத்துமாகும்.

இக்காணி பலபிட்டிய காணிப்பதிவு அலுவலகத்திலே 2001.06.20 ஆந் திகதிய இல. எல்டிஓஈ 1/29 இன்கீழ் பதியப்பட்டிருக்கும்.

பணிப்பாளர் சபை ஆணைப்படி,

டீ. ஜீ. விமலரத்ன,
பொது முகாமையாளர்.

றுஹுஹுண அபிவிருத்தி வங்கி,
பிரதான அலுவலகம், பம்புரண,
மாத்தறை.

9-795

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் - பீஎல்சி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி (பதிவு இலக்கம் பிகியு 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கங்கள் : 126155, 221942 மற்றும் 221950 — காரியவசம் புவக்பிட்டியகே குமாரசிரி, வெல்பல்ல ஆராச்சிலாகே பத்மினி ரணசிங்க

2008.07.10 ஆந் திகதியன்று கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி பணிப்பாளர்கள் சபையினால் கூடிய விசேட கூட்டமொன்றில் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :

"கடன் எடுத்த/காணியை ஈடுவைத்த காரியவசம் புவக்பிட்டியகே குமாரசிரி மற்றும் வெல்பல்ல ஆராச்சிலாகே பத்மினி ரணசிங்க என்பவர்கள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் தற்சமயம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எல். ஜயவீரவின் 2002.02.26 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 477, 2002.07.17 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 661, 2003.04.01 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 972 மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். கமகேவின் 2003.08.01 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 2123 மூலம் செலுத்தவேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மேற்படி முறிகள் பிரகாரம் 2008.04.06 ஆந் திகதிவரை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சிக்கு இருபத்தொரு இலட்சத்து நான்காயிரத்து எழுநூற்றுமுப்பத்தொன்பது ரூபா (ரூ. 21,04,739) வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி பணிப்பாளர்கள் சபையினால் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களினால் மேற்படி சொல்லப்பட்ட முறி இலக்கங்கள் 477, 661, 972 மற்றும் 2123 முறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட காணிகளை அதில் சேர்ந்த எல்லாம் சேர்த்து சொல்லப்பட்ட பணமான இருபத்தொரு இலட்சத்து நான்காயிரத்து எழுநூற்றுமுப்பத்தொன்பது ரூபாவுடன் (ரூ. 21,04,739) 2008.04.07 ஆந் திகதி முதல் ஏலத்திகதிவரை பதினேழு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து நூற்றெண்பது ரூபாவுக்கு (ரூ. 17,79,180) மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 26% வட்டியுடன் விளம்பரச் செலவுகள், வேறு கொடுப்பனவுகளை (பணம் செலுத்தியபின் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில் இலக்கம் 99 இல்உத்தரவுபெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஏவகம கோரலயில் உடுகாபத்துவில் களுஅக்கல கிராமத்தில் அமைந்துள்ள நாகாவத்த என்ற காணியின் நிலஅளவையாளர் எஸ். இத்தமல்கொடவின் 1981.01.15 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1371 இல் காண்பிக்கப்பட்ட லொட் 3 என்ற காணித்துண்டு மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், தாவரங்கள், மரங்கள் எல்லாம் சேர்த்து இக்காணியின் எல்லைகள்- வடக்கு : பிட்டதெனியவத்த, லொட் 2 மற்றும் கிராம சங்கத்துக்கு சொந்தமான காணிப்பகுதி ; கிழக்கு : லொட் 2 மற்றும் கிராம சங்கத்திற்கு சொந்தமான இக்காணியின் ஒரு பகுதி மற்றும் பிரதான வீதி ; தெற்கு : நாகாவத்த என்ற காணியின் ஒரு பகுதி ; மேற்கு : சாலாவ எஸ்டேட். இக்காணியின் விஸ்தீரணம் (3ஏ. 1றூ. 16பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 1371. இக்காணி அவிசாவளை காணிப்பதிவகத்தில் பி104/202 இல் பதிவுசெய்யப்பட்டது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

9-815

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.